# எண்திசை

விலை - 30/-

சமூக அரசியல் இதழ்

மலர் - 01 | இதழ் -01 | யூன் 1-15, 2011



## தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்

பக்கம் -09

## தமிழ் அறிஞர் சரவணபவன்

பக்கம் -02





## நெல்சன் மண்டேலாவின் பொன்மொழியும் புலம்பெயர் தமிழ் மக்களும்

பக்கம் -03


தமிழகத்தின் உரிமைக்குரல் சர்வதேச அரங்கில் ஒலிக்குமா — 06

தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்- ஐரோப்பிய பாராளுமன்றில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி — 09

ஈழத் தமிழருக்கு துரோகமிழைத்த காங்கிரசுக்கு தேர்தல் மூலம் மரண அடி கொடுத்த தமிழக மக்கள் — 17


இலங்கையை வழிக்குக்கொண்டுவர அந்த நாட்டின்மீது பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும் — 24

கடாபியும் மேற்குலகமும் — 26

ஒரு நாள் ஆசை... — 32

பேராசிரியர் துரைராஜா — 40

தந்தை செல்வநாயகம் அவர்களது 113 வது பிறந்த தினம், 34 வது சிரார்த்த தினம் ஆகியவற்றை முன்னிட்டு தந்தை அவர்களது ஞாபகார்த்தமாக போரால் பாதிக்கப்பட்டு குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மே மாதம் இரண்டாவது வாரம் த.தே.ம.மு வின் பொதுச் செயலாளரும், உபதலைவர்களில் ஒருவரும் இளைஞர் விவகாரங்களுக்கான இணைப்பாளருமான வி.மணிவண்ணன், பொருளாளர் தங்கராஜா, செயற்குழு உறுப்பினர் காண்டீபன், கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் கஜேந்திரகுமார் ஆகியோர் திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.



# தந்தை செல்வா அவர்களது நினைவாக உதவி வழங்கல்

## - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



த.தே.ம.மு இன் உபதலைவரும், திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான ஹரிகரன் அவர்களது தலைமையில் திருகோணமலையில் மக்கள் சந்திப்பு நிகழ்வுகள் இடம்பெற்றது. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து செட்டிகுளம் முகாமிலிருந்து தமது சொந்த இடமான திருகோணமலைக்குச் சென்று அடிப்படை வசதிகளின்றி அவலத்தில் வாழும் மக்களையும், சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் மூதூரில் உள்ள மணல்ச்சேனை, பட்டித்திடல், கட்டைப்பறிச்சான், கிளிவெட்டி ஆகிய இடங்களிலுள்ள இடம்பெயர்ந்தோர் தங்குமிடங்களில் வாழும் மக்களையும் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தனர். அத்துடன் குடும்பத்தலைவர்களை இழந்த பெண்களுக்கும், அங்கவீனமடைந்தவர்களுக்கும், கணவன்மார் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள மற்றும் காணாமல் போயுள்ளவர்களது குடும்பங்களுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் நிதி உதவிகள் வழங்கப்பட்டது. ஆறு இலட்சத்துப் பத்தாயிரம் பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்துள்ள தம்மை தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்த்தாமையினால் தாம் முகாம்களில் மிகமோசமான அவலவாழக்கையை வாழ்ந்து வருவதாகவும், அடிப்படை வசதிகள் இன்றி தகரத்தினால் அமைக்கப்பட்ட கொட்டகைகளில் சிறுவர், குழந்தைகள், கற்பிணிப்பெண்கள், நோயாளர்கள், முதியவர்கள் என அனைவரும் வாழ நிர்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களைச் சந்தித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரிடம் அவர்கள் கூறினர். மேலும் நிவாரண உதவிகள் போதுமானதாக இல்லை. மரக்கறிகளையோ, மாமிச உணவு வகைகளையோ, கறி சமைப்பதற்குத் தேவையான பொருட்களையோ கொள்வனவு செய்வதற்கு பணமில்லை. நோய் வாய்ப்பட்டால் மருந்துகள் வாங்க பணம் இல்லை, பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு எவ்வித வசதிகளும் இல்லை பாடசாலைக்கு அனுப்பினாலும், கல்வியை தொடரக்கூடிய சூழ்நிலை முகாம்களில் இல்லை என்றும் கூறினர். முகாம்களில் இருப்பவர்கள் வறுமை காரணமாக பிச்சை எடுப்பதற்காக வெளியில் சென்றிருப்பதாக பட்டித்திடல் முகாமில் உள்ள மக்கள் கூறினர். வளம்கொழிக்கும் வயல் நிலங்களும், தோட்ட நிலங்களும், மேட்டு நிலங்களும் தமக்கு உள்ளதாகவும் அங்கு தங்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கும்படியும், தமது ஊருக்கு விட்டாலே போதும் தங்கள் வீட்டுக் கிணற்றிலுள்ள தண்ணீரையாவது குடித்துவிட்டு நிம்மதியாக உறங்குவோம் என்றும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டனர். மேலும் பல பெண்கள் காணாமல்போன மற்றும் தடுப்பு முகாம்களில் உள்ள தமது கணவன்மாரை மீட்டுத்தரும்படி கண்ணீரோடு மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டனர்.

# எண்திசை

## இறைமைக்கான தமிழின் குரலாய் எண்திசையும் பரவட்டும்

சமூக அரசியல் இதழ்

யூன் 1 -15, 2011

இதழ் - 1

வெளியீடு:

எண்திசை குழுமம்

முகவரி :

120, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி:

0113157610

0750716892

ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்ககர்த்தாக்களே பொறுப்பு.

## நேசிப்புடன் பேசுவோம்

எண்திசை தமிழர்களது ஊடகப் பரப்பில் புதுவரவு- காலத்தின் தேவையையும், அவசியத்தையும் கருதி இது வெளிவருகின்றது.

மனுக்குல தர்மம் வெட்கித்தலைகுனியும் வகையிலான கொடூர யுத்தம் மூலம் தமிழ் மக்கள் பாரிய இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள். எனினும் கடந்தகால போராட்டத்தின் விளைவாக தமிழ் மக்களது அரசியல் உரிமைப் பிரச்சினையின் நியாயத்தை சர்வதேச சமூகம் மத்தியில் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத பேசு பொருளாக ஆக்கியுள்ளது. இத்தகைய சூழலில் இலங்கைத்தீவை மையப்படுத்தி சர்வதேச சமூகத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தமிழர்கள் தமது அரசியல் உரிமைக் கோரிக்கைகளை முன்னெடுத்துச் சென்று நியாயத்தை நிலை நாட்டுவதற்குரிய வாய்ப்பான சூழலைத் தோற்றுவித்துள்ளது.

இத்தகைய நிலையில் தமிழ்த் தேசியம் பற்றி ஆழமற்ற, குழப்பமான கருத்தியல் தளத்தில் சஞ்சரிக்கும் தொலை நோக்குச் சிந்தனைத்திறனற்ற தரப்புக்களால் தமிழ்த் தேசியம் தொடர்பாக குழப்பமான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றது.

இது துரதிஸ்டம் மிக்கதும், அபாயகரமானதுமான நிலையாகும். இந் நிலைமை ஏற்படுத்தப்போகும் எதிர்காலப் பேரவலம் குறித்து நாம் சிந்தித்து செயற்படவேண்டியது முன்னரை விடவும் அவசர அவசியமாகியுள்ளது. இந்த அவசியத்தின் அவசியமானது நிதான விவேகத்துடன் செயற்பட வேண்டிய அறிவு கொண்டதாக இருக்க வேண்டும்.

நமது அரசியல்வாதிகள், அறிவுஜீவிகள், ஊடகங்கள் என அனைத்துத் தரப்பினரும், தற்போது கிடைத்துவரும் சாதகமான சர்வதேச சூழலை தமிழ்த் தேசியத்தின் நலன் கருதிய திசையில் பயன்படுத்த முனைவதே அரசியல் விவேகமாகும். உள்நாட்டில் மட்டுமல்லாது புலம்பெயர் சமூகத்தவர்களிடையேயும் கருத்தியல் ஒருமைப்பாடு ஏற்பட முடியாதவாறு இடையூறாகப் பல்வேறு சக்திகள் தீவிரமாக இயங்கிவருவதும் கண்கூடு. இது மாற்ற முடியாத நிலையல்ல- மாற வேண்டிய நிலை.

தெளிவான உறுதியான தொலைநோக்குத் திறன்கொண்ட சிந்தனையுடனான செயற்பாட்டிற்குரிய திட்டமிடல்களை விரைந்து மேற்கொள்ள வேண்டிய தமிழ்த் தேசியக் கடமையை தமிழ் மக்கள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டிய தருணத்தில் எண்திசை அதற்கான அறைகூவலை விடுக்கின்றது. எண்திசை, அந்தச் செயற்பாட்டு இலக்கிலேயே தனது பயணத்தை தீர்க்கமான சிந்தனையுடன் ஆரம்பிக்கின்றது.

வெறுமனே அரசியல், மட்டுமல்லாது "எண்திசை" கலை இலக்கியம், சமூகவியல், வாழ்வியல், என பல்வேறு துறைகளையும் தொட்டே செல்லவுள்ளது.

எனவே அனைவரும் தொடர்ந்து வாருங்கள், வரலாற்றில் எம்மை அழிவுற்ற தோல்வியடைந்த மக்கள் எனப் பதிவு செய்யுமாறு விதிவகுக்க முனைவோருக்கு, நாம் புதிய வரலாற்றை சிருஸ்டிக்கும் உணர்வும், உயிர்ப்பும் உள்ளவர்கள் என்பதை உணர்த்துவோம்.

-ஆசிரியர் குழு-

யூன் 1-15, 2011

வன்னியின் புகழ்பூத்த தமிழ் அறிஞரும் முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளருமான உயர்திரு கந்தையா சரவணபவன் அவர்கள் கடந்த 05-06-2011 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதமடைந்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா சரவணபவன் அவர்கள் அன்பும் பண்பும், ஆளுமையும், கடமையுணர்வும் கொண்ட உயரிய பண்பாளர். மாணவர்களதும், அதிபர், ஆசிரியர்களதும் நலன்களில் மிகுந்த அக்கறை கொண்ட சரவணபவன் அவர்கள் மாவட்டத்தின் கல்வித்துறையின் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளதுடன், தமிழ் துறையின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியுள்ளார்.



# தமிழ் அறிஞர் சரவணபவன்

பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்த காலப்பகுதியில் மாணவர்களுடனும் ஆசிரியர்கள் அதிபர்களுடனும் மிகவும் நட்புணர்வோடு பழகும் இயல்புடையவராக விளங்கிய சரவணபவன் அவர்கள் யுத்த நெருக்கடி மிகுந்தகாலப்பகுதியில் மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்கு அளப்பரிய பங்காற்றியிருந்தார்.

மாவட்டத்தில் இருந்து பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும், ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிற்கும் செல்லும் நிலையை ஊக்குவிக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டிருந்தார். அவ்வாறு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் வறிய மாணவர்கள் தமது கல்வியை தொடர்வதற்காக பெருமளவான உதவிகளை பெற்றுக் கொடுத்துள்ளதன் மூலம் வறிய மாணவர்களது வழ்வில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்துள்ளார்.

வன்னியின் நாட்டார் இலக்கியங்களின் முக்கியத்துவம் தொடர்பிலான பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். "இராவணேசன்" கூத்துருவ நாடகத்தினை வன்னிக்குக் கொண்டுவருவதில் அயராது உழைத்தார். "வன்னியில் இராவணேசன் கூத்துருவ நாடகத்தின் பங்களிப்பில்" சரவணபவன் அவர்களை தவிர்த்து வரலாற்றினைப் பார்க்கமுடியாது. சமூக அக்கறை கொண்ட அவர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் புதுக்குடியிருப்புக் கிளைத் தலைவராகவும், வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகக் குழுத் தலைவராகவும் பதவி வகித்திருக்கின்றார்.

போரின் இறுதிவரையில் வன்னி மக்களுடனேயே வாழ்ந்து இடம்பெயர்ந்து தற்போது வவுனியா முகாமில் தங்கியிருந்து அங்கிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் சொந்த ஊருக்குச் சென்று மீளக் குடியமர அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் தான் நேசித்த மண்ணையும், மக்களையும் நினைத்துப் பெரும் வேதனையுடன் வாழ்ந்து வந்தார்.

ஊரிழந்து உடமையிழந்து அவல வாழ்வு வாழ்ந்த தனது ஊர் மக்களை மீளவும் சொந்த ஊரில் குடியமர்த்த வேண்டும் என்பதற்காக இறுதிக்கணம் வரை தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தார். எனினும் அவரது எண்ணங்கள் ஈடேற முன்னரே காலன் அவரை கவர்ந்துசென்றுவிட்டான். சரவணபவன் அவர்களது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல முல்லை மாவட்டத்திற்கும், வன்னி மண்ணிற்கும் ஏன் ஒட்டுமொத்த தமிழ்த்தேசத் திற்குமே ஈடுசெய்யப்பட முடியாத இழப்பாகும்.




# நெல்சன் மண்டேலாவின் பொன்மொழியும் புலம்பெயர் தமிழ் மக்களும்

"செயற்படுத்தி முடிக்கும் வரை சில விடயங்கள் எப்போதும் சாத்தியமற்றதொன்றாகவே காட்சி தருவதுண்டு"

–நெல்சன் மண்டேலா–

அண்மையில் நடைபெறும் சம்பவங்களை பார்க்கும் போது தென்னாபிரிக்காவின் முன்னாள் விடுதலைப் போராளியும், உலகின் புகழ்பெற்ற "த எல்டேர்ஸ்" அமைப்பின் தற்போதைய தலைவருமான நெல்சன் மண்டேலா கூறிய மேற்குறிப்பிட்ட வார்த்தைகளே நினைவில் வருவதுண்டு.

முள்ளிவாய்க்கால் சமரின் முடிவுடன் ஈழத் தமிழ் இனம் அழிந்துபோனது என எண்ணிய போது, அங்கிருந்து போர்க்குற்றம் என்னும் பலமான பூகம்பம் ஒன்று கிளம்பியுள்ளது.
1983ஆம் ஆண்டு தொடக்கம் முள்ளிவாய்க்காலில் 2009 மே 18 வரை உயிர்கொடுத்த ஒவ்வொரு தமிழர்களதும் கனவும் ஒன்றுதான், அதாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் தேவையை அனைத்துலக சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் என்பது தான். முள்ளிவாய்க்காலில் அவர்கள் வீழ்ந்தபோதும், அதற்கான வித்தாகத் தான் வீழ்ந்தார்கள்.

இராஜதந்திர நடவடிக்கைகளிலும் தமிழ் இனம் மேலோங்கி நிற்கவேண்டும் என்ற அந்த மக்களின் ஆசைக்கு இன்று புலம்பெயர் தமிழ் சமூகம் வலுச்சேர்த்து வருகின்றது. ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமைத்துள்ள மூவர் கொண்ட போர்க்குற்ற ஆலோசனைக் குழுவின் அறிக்கை போரின் கொடுமைகளையும், தமிழ் மக்களின் அரசியல் தேவைகளையும், சிறீலங்கா அரசின் தொடர்இன ஒடுக்குமுறைகளையும் தெளிவாக வெளிக்கொண்டுவந்துள்ளது. இது தமிழ் இனம் சந்தித்த முதலாவது இராஜதந்திர வெற்றி எனக் கூறலாம்.

2010 ஆம் ஆண்டு யூன் மாதம் ஐ.நா செயலாளர் நாயகம் இந்த குழுவை நியமித்தபோது, பிரித்தானியாவை தளமாகக் கொண்ட ஈழம் ஈ நியூஸ் என்ற இணையத்தளம் பல ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்களிடம் இருந்து இந்த குழு தொடர்பில் சேகரித்து வெளியிட்ட தகவல்களும் சரியான திசையில் கணிப்பிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதாவது ஐ.நா குழுவின் வலிமையை பல நாடுகள் குறைத்து மதிப்பிட்டபோதும், அது அமைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? அது எந்த திசையில் பயணிக்கப்போகின்றது என்பதை தமிழர் தரப்பு சரியாக கணிப்பிட்டிருந்தது.
ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையின் பின்னனியில்

அமெரிக்காவும், பிரித்தானியாவும் உள்ளதாகவும், புலம்பெயர் தமிழ் மக்கள் உள்ளதாகவும் சிறீலங்கா அரசு குற்றம் சுமத்திவருகின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக உலக நாடுகளை தனது அணியில் சிறீலங்கா அரசு இணைக்கும் போது, மேற்குலகத்துடன் ஈழத்தமிழ் மக்கள் இணைந்து செயற்படுவதில் தவறு எதுவும் இருக்கப்போவதில்லை.

குறிப்பாக சிறீலங்கா அரசின் அரவணைப்பிலிருந்து மேற்குலகு புறம்தள்ளப்பட்டதும், ரஸ்யா, சீனா உட்புகுந்து கொண் டதும் தான், தமிழ் இனத்திற்கு கிடைத்த பெரும் வாய்ப்பாகும். பலமான நண்பன் ஒருவனை தெரிவு செய்யும் வாய்ப்பை சிறீலங்கா அரசே தமிழருக்குக் கொடுத்துள்ளது. கடந்த ஏப்பிரல் 25 இல் ஐ.நா அதன் அறிக்கையை பகிரங்கப் படுத்தியுள்ளது. அதில் காணப்படும் பரிந்துரைகள் மிக முக்கியமானவை.

சிறீலங்கா அரசின் நல்லிணக்க ஆணைக்குழு முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், சுயாதீன விசாரணைக்கும் அது கோரிக்கை விடுத்துள்ளது. சுயாதீன விசாரணைகளை சிறீலங்கா அரசு மேற்கொண்டாலும்கூட அதனை கண்காணிக்க அனைத்துலக நிபுணர்குழு அவசியம் என்பதும் அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதும், அவர்கள் முற்றாக அழிந்து விட்டதாக சிறீலங்கா அரசே உலகை நம்ப வைத்துள்ளதால், அவர்கள் மீதான விசாரணைகள் அவசியமற்றதாகவே இருக்கின்றன. அதனைத் தான் உலகின் முன்னணி மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் நாடுகளின் அறிக்கைகளில் இருந்து உணர்ந்துகொள்ள முடிகின்றது.

அறிக்கையைப் பொறுத்தவரையில நிபுணர் குழுவின் இந்த வலிமையான அறிக்கைக்கான காரணம், அது தன்னிச்சையாக சாட்சியங்களை கோரியபோது, அதற்கு புலம்பெயர் தமிழ் மக்களும், அமைப்புக்களும் வாரி வழங்கிய ஆதாரங்கள் தான். அது மட்டுமல்லாது, உலகின் முக்கிய நாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நகர்வுகளும் அதற்கு ஒரு காரணம்.

ஆனால் தற்போது தமிழர்கள் மீது மேலும் வலுவான அழுத்தங்கள் வீழ்ந்துள்ளன. ஐ.நாவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் தமிழர்கள் விரைவாக முன்நகர்த்த வேண்டியவர்களாக உள்ளனர்.

அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை பான் கீ மூன் தன்னிச்சையாக செயற்படுத்த முடியாது. அதனை ஐ.நாவின் பொதுச் சபை, பாதுகாப்புச்சபை அல்லது ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் ஒன்றில் முன்வைப்பதன் மூலம் அதற்கான அங்கீகாரத்தை பெற்றே செயற்படுத்த வேண்டும்.

ஆனால் அதிக உறுப்பு நாடுகளை கொண்ட பொதுச்சபை மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவை விட 15 உறுப்பு நாடுகளை கொண்ட பாதுகாப்புச் சபையே சிறந்த தெரிவாக அமையலாம். எனவே தான் லிபியா பிரச்சனையையும்



பாதுகாப்புச் சபை ஊடாக அமெரிக்கா நகர்த்தியிருந்தது. பாதுகாப்புச்சபையில் உள்ள 15 நாடுகளில் 9 நாடுகளின் ஆதரவுகள் கிடைத்தால் சிறீலங்கா மீதான அனைத்துலக விசாரணைகள் ஆரம்பிக்கப் படலாம்.

9 நாடுகளின் ஆதரவுகளை பெறுவது கடினமானதல்ல, ஆனால் சீனா மற்றும் ரஸ்யா போன்ற நாடுகள் தமது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

சீனாவை மேற்குலகம் சமாளிக்கலாம், ஆனால் ரஸ்யாவின் தற்போதைய நிலை பாதகமான சமிக்கைகளை வெளிப்படுத்துகின்றது. சிறீலங்கா அரசும் ரஸ்யாவுடன் தனது நெருக்கத்தை அதிகரித்துள்ள துடன், விண்வெளிக்குச் சென்ற ஜரிஹகாரினுக்கு தென்னிலங் கையில் சிலையும் வைத்துள்ளது.

எனினும் சில பேரம் பேசுதல் ஊடாக அல்லது சில இராஜதந்திர அணுகுமுறைகள் ஊடாக மேற்குலகத்தின் உதவியுடன் ரஸ்யாவை வழிக்குக் கொண்டுவர புலம்பெயர் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் சாத்தியமாகலாம்.

நிரந்தரமற்ற 10 உறுப்பினர்களில் தென்ஆபிரிக்கா, இந்தியா, கொலம்பியா, ஜேர்மனி, போத்துக்கல் ஆகிய நாடுகள் 2012 வரை உறுப்புரிமை கொண்டுள்ளன.

இந்த வருடத்துடன் தமது உறுப்புரிமையை இழக்கும் பொஸ்னியா ஹெர்செகோவியா, பிரேசில், லெபனான், காபோன், நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு பதிலாக ஒஸ்ரியா, யப்பான், மெக்சிக்கோ, துருக்கி மற்றும் உகண்டா ஆகிய நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட நாடுகளில் இந்தியாவைத் தவிர ஏனைய நாடுகளது ஆதரவை மேற்குலகின் உதவியுடன் பெற்றுக்கொள்வது புலம்பெயர் தமிழர்களை பொறுத்தவரை சாத்தியமாகலாம்.

ஐ.நாவின் பாதுகாப்புச்சபையில் நிரந்தர இடம் வாங்கித்தருவேன் என்ற அமெரிக்காவின் பேரம்பேசுதலும் இந்தியாவின் வாயை மூடிவிடக்கூடும். எனவே தமிழர்கள் வெற்றி கொள்ள வேண்டியவை ரஸ்யாவும், சீனாவுமே. அவை தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தினாலும் கூட அது தமிழரின் பயணத்தின் முடிவல்ல. ஏனெனில் மேற்குலகத்தின் ஊடாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ அமைப்புக்களின் உதவியுடன் ஒரு காத்திரமான முழுமையான பொருளாதார மற்றும் இராஜதந்திர நெருக்கடிகள் ஏற்படுத்தப்படலாம்.

எனவே "தமிழரால் முடியாது" என்பது இங்கு உண்மையல்ல. "தமிழர்கள் முயற்சி செய்ய வில்லை" என்பதே உண்மை.

மீண்டும் ஒரு முறை இந்த பத்தியின் ஆரம்பத்தில் உள்ள நெல்சன் மண்டேலாவின் வாசகத்தை படித்துப்பாருங்கள். அந்த வார்த்தைகளின் ஊடாக தமிழர்கள் ஒவ்வொருவருக் குள்ளும் ஓர் உணர்வு பிறக்கும்.

**நன்றி – இணையம்**

மதிப்பிற்குரிய வாசகர்களே...
எண்திசையைப் படிக்கும் போது உங்கள் மனதில் எழும் கருத்துக்கள், சந்தேகங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :
0750716892
0113157610

எண்திசையில் விளம்பரம் செய்வதற்கு இதே முகவரியில் தொடர்பு கொள்ளவும்

வாசகர்களிடம் இருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. கல்வி, பொருளாதாரம், அரசியல், விளையாட்டு, கலை, இலக்கியம், சமூகப்பிரச்சினைகள் என பல்வேறு விடயங்களிலும் தரமான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு:-
ஆசிரியர்குழு, எண்திசை, இல.120, பிரதானவீதி, யாழ்ப்பாணம். தொ.பே.எண்:- 0113157610

**மொழிபெயர்ப்பாளர் தேவை**

அரசியல் கட்டுரைகளை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்புச் செய்வதில் தேர்ச்சி பெற்ற மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
தொ.பே.இல:- 0113157610

# தமிழகத்தின் உரிமைக்குரல் சர்வதேச அரங்கில் ஒலிக்குமா ?

இதயச்சந்திரன்



நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட தீர்மானமொன்று, தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது. இந்திய அரசானது, நிபுணர் குழு அறிக்கை குறித்து தொடர்ச்சியாக மௌனம் சாதித்து வருகையில், தமிழக அரசினால் இத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதன் பின்புலத்தை நோக்க வேண்டும். இத்தீர்மானத்தில், இலங்கை ஜனாதிபதி போர்க் குற்றவாளியென ஐ.நா. நிபுணர்குழு அளித்த பரிந்துரையை ஏற்று, அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், இலங்கைக்கு எதிராக ஏனைய நாடுகளுடன் இணைந்து பொருளாதாரத் தடை விதிக்கவும், இந்திய அரசு முன்வர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தனது உரையில், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை குறித்தும், இன்றைய அவலச் சூழல் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். தனது நிரந்தர அரசியல் எதிரியான கருணாநிதியின் எம்.பி.க்களது ராஜினாமா மற்றும் உண்ணாவிரத நாடகங்கள் போன்றவற்றையும் அம்மையார் குறிப்பிடத் தவறவில்லை. முதலமைச்சர் ஜெயலலிதாவின் வேண்டு கோளின்படி, இலங்கை மீது பொருளாதாரத் தடையை மேற்கொள்வதற்கு முன்பாக. கோரிக்கை ஒன்றினை விடுத்து, அது நிறைவேறாத பட்சத்தில் தடைகளைப் போடலாம். அதேபோன்று போர்க் குற்றவாளி என்று அறிவிப்பதற்கு அது குறித்த விசாரணையொன்று அனைத்துலக மட்டத்தில் நடாத்தப்பட வேண்டும்.

உதாரணமாக ஆர்ப்பாட்டம் செய்யும் பொதுமக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் சிரியா மீதான கண்டனத் தீர்மானமொன்றினை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்ற பிரித்தானியாவும் பிரான்சும் முயற்சிக்கின்றன. அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதன் அடுத்த கட்டமாக பொருளாதாரத் தடையை சிரியா மீது ஐ.நா. சபை மேற்கொள்ளும்.

அதே போன்று 1970 தீர்மானம் ஊடாக லிபியா மீது சீன, ரஷ்ய ஆதரவோடு பொருளாதாரத் தடை குறித்த தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. ஆகவே, தீர்மானம் ஏதுமின்றி, தனிப்பட்ட முறையில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையினை இந்தியா விதிக்குமா என்கிற கேள்வி எழுகிறது.

தமிழக முதல்வர் கூறுவது போன்று ஏனைய நாடுகளுடன் கூட்டாக இணைந்து தடைத் தீர்மானத்தை எடுக்க வேண்டுமாயின், அதற்கான பொதுத்தளம், பாதுகாப்புச் சபையோ, மனித உரிமைப் பேரவையோ அல்லது ஐ.நா. பொதுச் சபையாக இருக்க வேண்டும். இவை தவிர இந்தியா அங்கம் வகிக்கும் "சார்க்"

கூட்டமைப்பு அல்லது அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பின் ஊடாகவும் இலங்கை மீதான பொருளாதாரத் தடையை இந்தியா மேற்கொள்ளலாம். ஆனாலும் இவ்விரு அமைப்புக்களினூடாக இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வரும் இராஜதந்திர வல்லாண்மை, இந்தியாவிற்கு இருக்கிறதாவென்று தெரியவில்லை.



அடுத்ததாக "போர்க்குற்றவாளி, "போர்க்குற்ற நாடு" என்று தீர்மானத்தின் மீது உரையாற்றிய முதல்வர் கூறிய கருத்துக்கள் பற்றி பார்க்க வேண்டும். போர்க் குற்றம் புரிந்தவர்களை போர்க்குற்றவாளிகளென இந்தியா பிரகடனம் செய்ய வேண்டும் என்பதோடு அதனை ஐ.நா. சபையில் வலியுறுத்த வேண்டுமென முதல்வர் கூறுகின்றார். போர்க் குற்றங்களை இலங்கை அரசே விசாரிக்க வேண்டுமென, நிபுணர் குழு அறிக்கை பரிந்துரை செய்கிறது. அதனை நவநீதம்பிள்ளை அம்மையாரும் தனது மனித உரிமைப் பேரவையின் ஆரம்ப உரையில் குறிப்பிட்டிருந்தார். குற்றம் சாட்டப்பட்டவர், விசாரணையொன்றினை நடத்த முடியாது என்பது வெளிப்படையான உண்மையென்பதால், சர்வதேச சுயாதீன போர்க்குற்ற விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென்கிற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

தீர்மானங்களை நிறைவேற்றக் கூடிய ஐ.நா. சபையின் உயர் அமைப்பொன்றோ அல்லது இலங்கை அரசோ, விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை முன்வைக்க முடியுமென்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் அடிக்கடி குறிப்பிடுகின்றார். ஆனால் தம்மால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் அறிக்கையை ஐ.நா. பொதுச்சபைக்கோ, பாதுகாப்புச் சபைக்கோ அல்லது மனித உரிமைப் பேரவைக்கோ பான் கீ மூன் அனுப்பவில்லை. இலங்கை அரசின் பதிலுக்காகக் காத்திருக்கிறேன் என்கிற கால நீட்சி உத்தியையே மார்டின் நெசாக்கி ஊடாக ஊடகங்களின் முன் பயன்படுத்துகிறார்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை உத்தியோகபூர்வ பதில் எதனையும் வழங்காமல் அமைச்சர் ஒருவர் சேகரித்த பல இலட்சம் கையெழுத்து மனுவை ஐ.நா. சபைக்கு அனுப்பி வைத்துள்ளது.
நிபுணர் குழு அறிக்கைக்கு எதிரான, சிங்கள மக்களின் உணர்வு ரீதியிலான வெளிப்பாட்டினை முன்வைத்து, தனது கருத்தும் இதுவெனக் காண்பிக்கும் வகையில் அரசு செயற்படுகிறது.
அரசால் உருவாக்கப்பட்ட தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதியறிக்கை வரும்வரை, இரு தரப்பும் இழுத்தடிப்பு நாடகத்தை நிகழ்த்துவது போலுள்ளது. ஐ.நா. சபையின் பொதுச் செயலாளராக, ஜனவரி 2007இல் பதவியேற்ற பான் கீ மூனின் பதவிக் காலம் வருகிற டிசம்பர் 31ஆம் திகதியோடு முடிவடைகிறது.

அனைத்துலக நாணய நிதியத்தின் புதிய தலைவர் பதவியைப் பெறுவதற்காக உலக வலம் மேற்கொள்ளும் பிரெஞ்சு நிதியமைச்சர் கிறிஸ்டீன் லகார்ட் போன்று, அடுத்த 5 ஆண்டு கால ஐ.நா. பொதுச் செயலாளர் பதவியைக் கைப்பற்றுவதற்கான சர்வதேச நாடுகளின் ஆதரவைத் தேடும் பரப்புரையில் பான் கீ மூன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் இலங்கை விவகாரத்தில் ஒரு காட்டமான முடிவினை மேற்கொண்டு அதற்கு ஆதரவு வழங்கும், குறிப்பாக மேற்குலகிற்கு எதிரான நாடுகளின் ஆதரவினை இழந்துவிடக் கூடாதென்கிற எச்சரிக்கை உணர்வோடு காய்களை நகர்த்துகிறார் பான் கீ மூன். ஆனாலும் புவிசார் பொருண்மியத்தில் முன்னிலை வகிக்கும் அமெரிக்காவும், சீனாவும், பான் கீ மூனை ஆதரிக்குமென நம்பப்படுகிறது.

இரண்டாவது தடவையாக ஐ.நா. பொதுச் செயலாளருக்கான போட்டிக் களத்தில் குதிக்கும் பான் கீ மூனை தாமும் ஆதரிப்பதாக, இலங்கை அரசு வெளியிடலாம்.

ஆகவே நிபுணர்குழுவின் அறிக்கையை ஐ.நா. சபையில் முன்வைக்காமல் இழுத்தடிக்கும் பான் கீ மூனின் உள்நோக்கத்தை, மேற்குறிப்பிடப்பட்ட செய்திகளிலிருந்து புரிந்து கொள்ளலாம். இந்நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்பார்ப்பது போன்று, ஐ.நா. சபையின் எந்தத் தளத்தில் தமிழக அரசின் தீர்மானத்தை இந்தியா வலியுறுத்த முடியும்? தற்போது நடைபெறும் மனித உரிமைப் பேரவையின் 17ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்ளும் 47 நாடுகளில் இந்தியா இல்லை. கடந்த வருடம் ஜூன் 20.0 வரை இந்தியாவின் உறுப்புரிமை இப்பேரவையில் இருந்தது. இவை தவிர ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உள்ள, நிரந்தர உறுப்புரிமையற்ற பத்து நாடுகளில் இந்தியாவும் இருக்கின்றது.

இச்சபையில் டிசெம்பர் 2012 வரை உறுப்பினராகவிருக்கும் இந்தியாவானது இலங்கை அரசிற்கெதிரான போர்க் குற்ற விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென்கிற பிரேரணையை முன்மொழியலாம். அதற்கு ஆதரவாக ஒன்பது நாடுகளை இந்தியாவால் திரட்ட முடியும். அவ்வாறான தீர்மானத்தை இந்தியா முன்வைத்தால் ரஷ்யா, சீனா மற்றும் பிரேசில் போன்ற பிரிக்ஸ் இல் அங்கம் வகிக்கும் நாடுகள், வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் விலகி நிற்கும் வாய்ப்புண்டு. ஆனாலும் நிபுணர் குழுவின் அறிக்கையை பாதுகாப்புச் சபையில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் சமர்ப்பிக்கவில்லை என்கிற காரணத்தை முன்வைத்து இந்தியா நழுவிச் செல்லலாம்.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தீர்மானத்தின் கனதியை உள்வாங்கி, தனது வெளியுறவுக் கொள்கையை இந்தியா சடுதியாக மாற்றிக் கொள்ளுமாவென்று தெரியவில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவும், இலங்கை அமைச்சர் ஜீ.எல். பீரிசும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை குறித்து விவாதிப்பதற்கு, பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையில் இந்திய வெளி விவகாரச் செயலாளர் நிருபமாராவ் மற்றும் பாதுகாப்புச் செயலர் பிரதீப்குமார் ஆகியோர் இலங்கைக்கான அவசரப் பயணமொன்றினை மேற்கொண்டுள்ளனர். இலங்கைக்குச் செல்வதற்கு முன்பாக, தமிழக முதல்வரை சிவ்சங்கர் மேனன் சந்தித்துள்ளார். அத்தோடு கச்சதீவை மீளப் பெற வேண்டுமென்கிற ஜெயலலிதா அம்மையாரின் கோரிக்கையும், இந்திய -இலங்கை அரசுகளுக்கிடையிலான இராஜ தந்திர உறவுகளில், புதிய நெருக்கடிகளை உருவாக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை அ.தி.மு.க.வின் தேர்தல் வெற்றிக்கு வாழ்த்துக் கூறியவாறு, தமிழக முதல்வருடன் உறவினை ஏற்படுத்த இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சிகள் யாவும், சட்ட சபைத் தீர்மானத்தோடு நொருங்கிப் போனதால், மாநில அரசுகள் குறித்து எமக்குக் கவலையில்லையென மீசையில் மண் ஒட்டாத கதையொன்றினைக் கூறியுள்ளார் அமைச்சர் கெகலிய ரம்புக்வெல.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய உயர் மட்ட இராஜதந்திரிகள், இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதற்கு தமிழக சட்ட சபைத் தீர்மானத்தை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முற்படலாம். காங்கிரஸின் தி.மு.க.வுடனான உறவு மிகப் பலவீனமாகவுள்ள நிலையில், ஈழப் பிரச்சினை குறித்து இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் நெருங்கி வருவதையிட்டு, இலங்கை அரசு பதட்டமடையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே, நிபுணர்குழுவின் அறிக்கைக்கு ஆதரவாக இந்திய மத்திய அரசு திரும்பிவிடலாம் என்று கணிப்பிடும் இலங்கை அரசு, இந்தியா முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்று வதாக உறுதியளிக்கும் வாய்ப்புண்டு. அதேவேளை இலங்கையின் பெரும் முதலீடுகளையும் வர்த்தக ஒப்பந்தங்களையும் செய்துள்ள இந்திய நிறுவனங்கள் ஜெயலலிதா அம்மையாரின் "பொருளாதாரத் தடை" என்கிற விவகாரத்தை தமது வர்த்தக விரிவாக்கத்திற்குச் சாதகமான விடயமாகப் பார்க்காது. "சீபா" ஒப்பந்தம் ஊடாக சீனாவின் காலூன்றலை தடுத்துவிடலா மெனக் காய்களை நகர்த்தும் இந்திய ஆட்சியாளர், சட்டசபைத் தீர்மானத்தை அழுத்தம் கொடுக்கும் கருவியாகப் பயன்படுத்துவார்களே தவிர, அவ்வாறான தடைகளை மேற்கொள்ள நிச்சயம் முயலமாட்டார்கள்.

ஆனாலும் அகில இந்திய அளவில் திரட்டப்படும் ஆதரவு, சிலவேளைகளில் மத்திய அரசின் போக்கினை மாற்ற உதவலாம்.

**நன்றி - இணையம்**

இம்மாதம் முதலாம் திகதி பெல்ஜியம் நாட்டின் பிரசெல்ஸ் நகரில் அமைந்துள்ள ஐரோப்பியப் பாராளுமன்றக் கட்டடத்தில் இலங்கைப் பிரச்சினை தொடர்பான விசாரணை மகாநாடு இடம் பெற்றது. ஐரோப்பிய இடதுசாரிப் பசுமைக் கட்சியும், நோடிக் இடதுசாரி பசுமைக்கட்சியும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் இணைந்து மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐரோப்பிய இடதுசாரி பசுமைக் கட்சியை சார்ந்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் திரு.போல் மேவ்பி அவர்கள் இம்மாநாட்டின் முக்கிய ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கட்சியின் நிலைப்பாட்டை முன்வைக்குமாறு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும், தமிழ்த் தேசத்தின் இறைமைக்காகவும் உறுதியாகக் குரல் கொடுத்துவருவதுடன், தமிழ் மக்கள் மீது




புரியப்பட்ட இனப்படுகொலைகள் தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை நடாத்தப் படல் வேண்டுமென தொடர்ச்சியாக வலயுறுத்தி வரும் அரசியல் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மூவருக்கு இந்நிகழ்வில் கலந்து கொள்ளுவதற்கான அழைப்பு போல்மேபி அவர்களால் அனுப்பப்பட்டிருந்தது. கட்சி சார்பாக சின்னத்துரை வரதராஜன், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் உபதலைவர் களில் ஒருவரும் இளைஞர் விவகாரங்களுக்கான இணைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகிய மூவரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

**கட்சியின் தலைவர் சின்னத்துரை வரதராஜன்** அவர்கள் உரையாற்றுகையில் போர் முடிந்து அமைதி

# தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



ஐரோப்பிய பாராளுமன்ற வளாக மாநாட்டிஸ் வரதராஜனுடன் வைகோ அவர்கள்



மாநாட்டில் வி.மணிமண்ணன்

திரும்பிவிட்டதாகவும், வடக்கு கிழக்கு பிரதேசங்கள் வேகமாக அபிவிருத்தி செய்யப்படுவதாகவும் அரசு பிரசாரம் செய்கின்றது. ஆனால் இது உண்மையல்ல. அபிவிருத்தி என்ற போர்வையில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு முன்னதாகவே வங்கிக் கிளைகள் திறக்கப்படுகின்றன. அவற்றின் மூலம் மக்களிடமுள்ள பணம் சேமிப்பாகப் பெறப்பட்டு அவற்றில் பெரும்பகுதி தென்னிலங்கைக்கு கொண்டுசெல்லப்பட்டு முதலீடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் வடக்கு கிழக்கில் பிரதேச அபிவிருத்தியையும், மக்களுக்கான நிரந்தர பொருளாதார மேம்பாட்டையும் கருத்தில்கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படவில்லை.

தாயகத்தின் அபிவிருத்தியில் பங்கெடுக்க வேண்டிய இளம் தலைமுறை இளைஞர்கள், யுவதிகளை தவறான செயற்பாடுகளில் செல்ல ஊக்குவிக்கப்படுகின்றனர். குறிப்பாக மாணவர்களது நிலை மிகவும் மோசமாக உள்ளது. வகுப்பறைகளுக்கு மதுபோதையில் செல்லுமளவுக்கு மாணவர்கள் மத்தியில் மதுப்பழக்கம் முன்னெப்பொழும் இல்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது. இப்பழக்கத்திற்கு மாணவர்கள் திட்டமிட்டு அடிமையாக்கப்படு கின்றனர். தமிழ் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்க விரும்பும் சக்திகளே இச் சீரழிவை ஊக்குவிக்கின்றனர்.

**கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஆற்றப்பட்ட உரையின் முழுவிபரம் வருமாறு.**

இலங்கைத்தீவில் நிலவுகின்ற பிரச்சினை பற்றி விசாரணை செய்வதற்கான ஏற்பாடுகளை மிகப் பொருத்தமான இத்தருணத்திலே ஜனநாயக

விழுமியங்களை மதிக்கின்ற உயர்சபையான இந்த ஐரோப்பிய பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஏற்பாடு செய்தமைக்காக மட்டுமன்றி விசாரணையின் போது எமது கட்சியின் நிலைப்பாடுகளையும் சமர்ப்பணம் செய்வதற்காக எங்கள் கட்சியை அழைத்த மைக்காகவும், கௌரவ போல் மேவ்பி அவர்க ளுக்கும் ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவினது ஐரோப்பிய பச்சை இடது/நோடிக் பச்சை இடது குழுவினருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழ் மக்களுடைய தலைவிதியும் அவர்களது இருப்பும் ஊசலாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே நீதிக்காகவும் அமைதிக்காகவும் நியாயமான வகையில் போராடிவரும் தமிழ் மக்களுக்காக ஐரோப்பிய பாராளுமன்றத்தினுள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் ஆக்கபூ ர்வமான நடவடிக்கைக்களுக்கான முதற்படியாக இந்த விசாரணை அமைய வேண்டும் என்பது எங்கள் வேணவாவாகும்.

**இலங்கைத்தீவில் நிலவும் பிணக்குக்கான மூலகாரணங்கள்**

தீவிலும் அதேபோன்று பிராந்தியத்திலும் நிலவுகின்ற இனப்பரம்பல் ரீதியான ஒருசில உண்மை நிலைகளிலிருந்தே இத்தீவில் இன முரண்பாடு ஏற்படலாயிற்று. இலங்கைத் தீவில் இருவேறு தேசங்கள் உள்ளன. அவையாவன சிங்கள மொழிபேசும் சிங்கள தேசமும், தமிழ்மொழி பேசும் தமிழ்த் தேசமும் ஆகும். மக்கள் தொகையில் அதிகமானோரைக் கொண்ட சிங்களத் தேசமானது பூகோள ரீதியாக தீவின் தெற்கு, மேற்கு மற்றும் மத்திய பகுதிகளை உள்ளடக்கியதான அமைவிடத்தில் அமைந்து ள்ளது. மக்கள் தொகையில் குறைந்த தொகையி னரைக்கொண்ட தமிழ்த் தேசமானது பூகோள ரீதியாக தீவின் வடக்கு, மற்றும் கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கியதான அமைவிடத்தில் அமைந்துள்ளது. ஐரோப்பிய காலணித்துவ ஆட்சி இத்தீவில் ஏற்படுவதற்கு முன்னர் இந்த இரண்டு தேசங்களும் தமக்கெனத் தனியான சொந்த இராசதானிகளை கொண்டிருந்தன. பிரித்தானிய காலணித்துவ ஆட்சியாளர்களே தமிழ்த் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் தமது நிர்வாக வசதிக்காக ஒன்றிணைத்தனர்.

இலங்கைத்தீவின் இனப்பரம்பலின் உண்மை யான நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும், ஒட்டுமொத்த இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் யதார்த்தநிலைமை இதற்கு மாறானதாகவுள்ளது. காரணம் கடலால் பிரிக்கப்பட்டு வெறும் இருபத்திரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள இந்தியாவின் தென்கோடியின் தமிழ்நாட்டில் 6,20,00,000 தமிழர்கள் வாழ்ந்துவருவதேயாகும். வேறுவகையிற் கூறுவதானால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சிங்களவர்கள் ஒரு சிறுபான் மையினராகவே உள்ளனர். இது இனப்பரம்பல் ரீதியான ஒரு யதார்த்தமாகும். சிங்கள மக்களை தமிழ் மன்னர்கள் ஆட்சிசெய்து வந்தனர் என்ற உண்மை மேற்சொன்ன இனப்பரம்பலை மேலும் உறுதி செய்கிறது. பிரித்தானியரிடம் சரணடையும்போது கண்டியை ஆண்ட கடைசி மன்னன் தனது சரணாகதிப் பத்திரத்தில் (சிங் களத்திலன்றி) தமிழ்மொழியிலேயே ஒப்பமிட் டான் என்பது வரலாற்று உண்மை.

இலங்கைத்தீவில் தமிழ் தேசத்தின் இருப்பினால் பிராந்தியம் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பரந்த தமிழ்த்தேசியவாதம் உண்டாக்கப்பட்டு விடுமோ என்றும் அதன் காரணமாக தீவில் சிங்களத்தேசத்தின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடுமோ என்ற கரிசனையும் சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற பொதுவான தொரு அச்சமாகும்.

மறுபுறத்தில் தமிழர்களுடைய போராட்டம் ஓரங்கட்டலுக்கு(discrimination) எதிரான போராட்டம் என்பதைவிட நிரந்தரமாக சிங்களப் பெரும்பான்மையினரால் நீண்டகாலமாக தமிழர் கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அந்நிய ஆட்சிக்கு எதிரானதென்பதே உண்மையாகும். இதற்கு ஆதாரமாக, ஐரோப்பிய காலணித்துவ ஆட்சியாளர்கள் இறுதியாக தீவைவிட்டு வெளி யேறிய பின்னர் கடந்த ஆறு தசாப்தகாலமாக இலங்கையில் எப்போதுமே நாட்டின் நிறை வேற்று அதிகாரமுள்ள தலைவராக சிங்கள பௌத்தர் ஒருவரே இருந்து வருகிறார் என்பதைக் குறிப்பிடலாம்.

தமிழர்களது போராட்டம் சிங்கள அடக்கு முறைக்கு எதிரான போராட்டமென பலர் கருதுகின்றனர். இது உண்மையாயிருந்த போதி லும், உண்மையில் தற்போதைய கேள்வியானது சிங்கள ஆட்சியானது அடக்குமுறை ஆட்சியா என்பதல்ல. அவ்வாறு சிங்கள ஆட்சியானது அட


க்குமுறை ஆட்சியா? என்பது கேள்வியாயிருந் தால், அதற்குரிய தீர்வானது "நட்பிணக்கமுள்ள சிங்கள ஆட்சி" அமைய வேண்டும் என்பதாகவே இருக்கும். ஆனால் தமிழ் மக்களது போராட்டத் தின் அடிப்படை என்ன வெனில் தமிழ் மக்களின் போராட்டமானது தம்மைத்தாமே ஆட்சிசெய்வ தற்கான தமக்குள்ள சனநாயக உரிமைபற்றியதா கும். இந்த உரிமையை பாதுகாத்துக்கொள்ளவே தமிழர்கள் முனைகின்றனர். தமிழ் மக்கள் ஒரு சுதந்திர இனமாக இருந்தால் மட்டுமே அவர்களால் தமது புராதன பாரம்பரியத்தையும் வளமான மொழியையும் ஒற்றுமையோடு தெளி வாக பரிணமிக்கச் செய்யமுடியும். சுதந்திரமான இனம் என்ற ரீதியில் மட்டுமே தமிழ் மக்களால் தமது பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைக ளையும் அவர்களது முழு ஆற்றல்களுக்கேற்ப முன்னேற்றமடையச் செய்யமுடியும். மக்களின், மக்களால், மக்களுக்காக நடைபெறும் ஆட்சியே சனநாயகம் என்றால் அதன்படி ஒரு இனம் இன்னோர் இனத்தை அடக்கி ஆளமுடியாது.

தீவில் நிலவும் இனப்பிரச்சினையுடன் சம்பந் தப்பட்ட ஒரு தரப்பு மற்றைய தரப்பினரின் நலன் களை பாதுகாக்க முயல்கின்றது என்று கூறுவது போலியானதாகும். இந்துசமுத்திரப் பிராந்தியத் தில் ஏற்படக்கூடிய ஒரு தமிழ்ப் பெரும்பான் மைக்கு எதிராக சிங்கள தேசம் தமது தேசிய அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ள முயல்கின்றது. தமிழீழ தேசம் இலங்கைத் தீவுக்குள் சிங்கள பெரும்பான்மையிடம் இருந்து தமது தனித்துவமான தேசிய அடையாளத்தை நிலைநிறுத்திப் பாதுகாத்துக்கொள்ள முயல் கின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமிழ்ப் பெரும்பான்மையினரின் ஆட்சி எதிர்காலத்தில் ஏற்பட்டுவிடுமோ என்று சிங்கள மக்கள் அஞ்சு கின்றனர். தமிழ் மக்களோ இலங்கைத்தீவுக்குள் நிலவும் சிங்கள மேலாதிக்க ஆட்சியைக்கண்டு அஞ்சுகின்றனர்.

**போரும் அதன் பின்னரான உடனடி விளைவுகளும்**

தமிழ் மக்கள் ஒரு தேசத்தின் மக்கள் என்ற தனித்துவ அடையாளத்தோடு இலங்கைத்தீவில் இருப்பதனை சிங்கள மக்கள் தமது சிங்கள தேசத்தின் இருப்புக்கான அச்சுறுத்தலாகவே நோக்குகின்றனர். இதன் காரணமாகவே, ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்கள் தீவைவிட்டு வெளியேறிய கையோடு ஆட்சிப் பீடமேறிய சிங்கள மேலாதிக்கம் கொண்ட அனைத்து அரசாங்கங்களும் தமிழ் மக்கள் ஒரு தேசமாக நிலைத்திருப்பதை இல்லாது அழிப்ப தனை இலக்காகக் கொண்டு செயற்பட்டு





வருகின்றன. தமிழ்ப் பகுதிகளின் இனப்பரம்பலை மாற்றியமைத்து அதன்மூலம் தமிழ் மக்களை அவர்களது தாயகத்திலேயே சிறுபான்மையின ராக்கும் நோக்கோடு அரச ஆதரவுடனான சிங்களக் குடியேற்றங்களை தமிழ்ப் பகுதிகளில் மேற்கொண்டுவருதல் அத்தகைய செயற்பாடுக ளுள் ஒன்றாகும். தமிழரது பாரம்பரிய கலாச்சார மையப்பகுதிகள் திட்டமிட்டவகையில் அழிக்கப் பட்டுள்ளன. தமிழ் மக்களது தற்சார்புடைப் பொருளாதார அமைப்பு திட்டமிட்டவகையில் இலக்குவைக்கப்பட்டுள்ளது. கல்விமுறைமை யும் தமிழ் மக்களுக்குப் பாதகமான வகையில் வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டதோடு அவர்களது மொழியுரிமையும் மறுக்கப்பட்டது. இவற்றுக்கெல்லாம் மேலாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கான இனவாத ரீதியான பல நிகழ்ச்சித்திட்டங்களை காலத்துக் குக்காலம் அரசு நிறைவேற்றி வந்துள்ளது. சிங்கள மேலாதிக்கம் கொண்ட அனைத்து அரசுகளுமே, தமிழ் மக்கள் தனியொரு இன, சாதிய, சமய, அல்லது தேசிய குழுமமாக இருப் பதை முற்றாகவோ அல்லது பகுதிபகுதியாகவோ அழித்தொழிப்பதற்கான ஒரேமாதிரியான திட்டத்தை வேண்டுமென்றே நிறைவேற்றி வருகின்றன என்பதில் ஐயமில்லை. வேறுவகை யில் கூறுவதானால் மெதுவானதும் திட்டமிட்டது மான ஒரு இன ஒழிப்பையே தமிழ் மக்கள் எதிர்கொண்டனர் எனலாம்.

இன முரண்பாட்டை அரசியல் ரீதியாகவும் ஜனநாயக வழியிலும் தீர்ப்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அம்முயற்சிகள் எதுவும் சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஒரு தேசம் என்ற ரீதியில் தமிழ் மக்களது இருப்பை அரசியல் ரீதியாக அங்கீகரிக்க சிங்களத் தேசம் மறுத்தமை, மட்டுமன்றி தனித்துவமான தேசிய இனமான தமிழ்த் தேசத்தின் இருப்பையே அழிப்பதற்கு தொடர்ச்சியாக சிங்கள ஆட்சி யாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக் கைகள் காரணமாக, விரக்தியுற்ற தமிழ் மக்கள் தங்கள் இருப்பை பாதுகாக்கும் நோக்கோடு ஆயுதப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டனர். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆந் திகதிவரை தமிழீழ விடுதலைப் புலிகளே அந்த ஆயுதப் போராட்டத்தை முன்னின்று நடத்தினர்.

இலங்கை அரசுக்குக்கெதிராக ஆயுதமேந்து வதற்கான உண்மையான காரணம் இப்படியிருக்

கும் போது அந்த ஆயுதப் போராட்டத்தை பயங்க ரவாதமென சர்வதேச சமூகத்தின் பெரும்பாலா னோர் நோக்கினர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதோடு அதனை இராணுவரீதியாக தோற்கடிப்பதற்கான இல ங்கை அரசின் முயற்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டம் பற்றி தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொண்டிருந்த போதிலும் சர்வதேச சமூகம் வேறொருவிதமான நம்பிக் கையை புரிதலைக் கொண்டிருந்தது.
அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆயுதப் போராட்டத்தையும் களத்திலிருந்து ஒழித்துவிட்டால் சிங்கள தேசிய இனமானது தமிழ்த்தேசிய இனத்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் அரசியல்யாப்பு மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் அரசியல் தீர்வைக் காண்பதற்கான பாதுகாப்பான சூழ் நிலையை சிங்கள மக்களுக்கு ஏற்படுத்துமென சர்வதேசசமூகத்தினர் நம்பினர்.

துரதிஷ்டவசமாக உண்மை நிலைமையோ முற்றிலும் மாறுபட்டதாய் உள்ளது. தமிழ் மக்கள் வேண்டுமென்று பாரபட்சமின்றி தொடர்ந்தும் இலக்கு வைக்கப்பட்டு இன அழிப்புக்கு உள் ளாக்கப்படுகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் கூட போர் நிலவிய காலத்தைப் பார்க்கிலும் தமிழரின் தாயகம் பாரியளவில் இராணுவமயப் படுத்தப்பட் டுள்ளது. உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் ஆயிரக்கணக் கான ஏக்கர் தனியார் நிலங்கள் அரசுடமையாக் கப்பட்டுள்ளன. இதற்கும் மேலாக தமிழ் மக்கள் தத்தம் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து அரசினால் துரத்தியடிக்கப்படுகின்ற மறைமுக மான சூழ்ச்சிகளும் அமுலாகின்றன. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபின்னரும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஒடுக்குமுறைக்கு உள் ளாக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி அம்னெஸ்ரி இன்டர்நஷனல், இன்ரநஷனல் கிறைசிஸ் குறுப் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற பல மனித உரிமை அமைப்புகளால் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் திட்டமிட்டவகையில் தமிழ் மக்கள் இன ஒழிப் புக்கு ஆளாகும் நிலை கேட்பாரின்றித் தொடர் கின்றது.



**நிரந்தர சமாதானத்திற்கான வாய்ப்புக்கள்**

தமிழ் மற்றும் சிங்களத் தேசங்களுக்கிடையில் எழுந்துள்ள பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நிரந்தரமான நிலையான அரசியல் தீர்வை

ஏற்படுத்துவதே ஒரேவழியாக இருப்பினும் அவ்வாறான நிரந்தர அரசியல் தீர்வொன்றுக்கான சாத்தியக்கூறுகள் யாவை? இலங்கைத்தீவிலுள்ள தமிழ் மக்கள் சந்தித்த, சந்தித்துவரும் இனஅழிப்புப் பற்றிய ஆழமான மற்றும் சுதந்திரமான, பக்கச்சார்பற்ற அனைத்துலக விசாரணையொன்று உண்மையாகவே தேவைப்படுகின்ற இந்த நேரத்தில் எமது கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அத்தைகைய விசாரணை அத்தியாவசியமென வலியுறுத்துகின்றது. அத்தகைய விசாரணையானது போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த போர்க்குற்றங்களுக்கு மாத்திரமன்றி கடந்த அறுபதாண்டு காலத்திலும் இடம்பெற்ற இனஅழிப்பை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டுமெனவும் கோருகின்றது.



தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்காகப் பொறுப்புக் கூறவேண்டியது அத்தியாவசியமென நாங்களும் கருதும் அதேவேளை, இன முரண்பாடானது அடிப்படையில் ஒரு அரசியல்ப் பிரச்சினை என்பதுடன் அதற்காக அரசியல்த் தீர்வே தேவைப்படுகின்றது என்றும் வலியுறுத்துகின்றோம். இதுவரை காலமும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பிரேரிக்கப்பட்டுவருகின்ற படிமுறையானது சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையே அதிகாரப் பரவலொன்றை ஏற்படுத்தக்கூடிய ஏற்பாட்டினைக் கொண்ட அதிகாரப் பரவலாக்கல் அமைப்பாக இலங்கை அரசை மாற்றம் செய்துகொள்ள வேண்டுமென்பதேயாகும். வேறுவகையில் சொல்வதானால் ஓர் அமைப்பு என்ற முறையில் அரசிற்கு எல்லா அதிகாரங்களும் இருப்பினும் கூட அரசியலமைப்பை உள்ளகரீதியாக மீளமைப்பு செய்வதன் மூலம் கூட்டாட்சி ஏற்பாடு ஒன்றினை அறிமுகம் செய்யவேண்டும் என்பதேயாகும். குறிப்பாக இதன்பொருளானது மேலிருந்து கீழான அல்லது அதிகாரப் பரவலாக்கம் மூலமே ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு கூட்டாட்சி முறைமையொன்றினை கொண்டு வருவதாகும்.

அவ்வாறானதொரு அரசியலமைப்பு மாற்றத்தை இலங்கை அரசு நிராகரிப்பது மட்டுமன்றி, அதற்கெதிரான திசையில் தற்போது நிலவுகின்ற சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சிமுறையை அரசமைப்பில் மேலும் மேலும் ஆழப்படுத்தும் வகையில் எதிர்த்திசையில் பயணிக்குமாயின், அதன் விளைவு என்னவாயிருக்கும் என்பதே கேள்வியாகும். இதுவே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இத்தகையதொரு சூழமைவில் இலங்கைத்தீவில் உண்மையானதொரு தீர்வைக் காணவிரும்பும் ஒவ்வொருவரும் சனநாயக விழுமியங்களை அதன் முழுமையான அர்த்தத்துடன் மீண்டும் ஒருமுறை முழுமையாக பரிசீலிக்க வேண்டும் என்பது எங்களுடைய ஆணித்தரமான கருத்தாகும். இலங்கைத் தீவு அதிகப் பெரும்பான்மையாக வாழும் சிங்கள தேசிய இனத்தை நிரந்தர பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது டன், எண்ணிக்கையில் குறைந்த தமிழ்த் தேசிய இனத்தையும் கொண்டுள்ளது என்பதே உண்மை. மாற்றம் ஏதும் இல்லாமல் பழைய பல்லவியையே பாடிக்கொண்டு இனப்பிரச்சினையை தொடர்ந்தும் அணுகினால் அதில் சிறிதும் முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை. சனத் தொகையில் எழுபத்தைந்து வீதத்தைக்கொண்ட ஒரு பெரும்பான்மையினம் கடந்த அறுபதாண்டு காலமாக ஆட்சியதிகாரத்தினைப் பயன்படுத்தி பௌத்த பேரினவாத அரசாக வலுப்படுத்தியுள்ளது, மேலும் மேலும் வலுப்படுத்த விரும்புகின்ற மனப்பான்மையை சடுதியாக மாற்றிக் கொள்ளுமென எதிர்பார்க்க முடியாது.

இன ஒழிப்புக்குச் சமமான போர்க் குற்றங்களை இழைத்தும் மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தும் முழு இலங்கைதீவிலும் சிங்கள பேரினவாதத்தை நிறுவுவதில் விடாப்பிடியாக இருந்துவரும் சிங்கள தேசமானது அதன் பாதையை மாற்றிக் கொள்ளமாட்டாது.

இந்நிலையில் இலங்கைத் தீவின் ஒரேஒரு அதிகாரமையமாக உள்ள ஸ்ரீலங்காஅரசு வின் நிரந்தரமான பாதுகாவலர்களாக பௌத்த சிங்களவர்கள் காணப்படும்போது, அந்த ஸ்ரீலங்கா அரசை அங்கீகரிப்பதானது இனப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்துவதாகவும், இன அழிப்புத் தொடர்வதற்கு வழிவகுப்பதாகவுமே அமையும்.


இவ்வாறான அணுகுமுறைக்குப் பதிலாக, கீழ் மட்டத்திலிருந்து மேல்நோக்கிச் செல்கின்ற படிப் படியான அணுகுமுறையையே நாங்கள் இந்த இனப்பிணக்கிற்குப் பரிகாரமாக முன்வைக்கின்றோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் தீவில் சிங்கள தேசம், தமிழ்த் தேசம் ஆகிய இரண்டு தேசங்கள் உள்ளன என்பதும், அத்தேசங்களின் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு என்பதும் அங்கீகரிக்கப்பட வேண்டியது முதற் படியாகும். இதன் மூலம் தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருப்பதை அரசியல் ரீதியாக அங்கீகரிக்கும் நிலையொன்றை தோற்றுவிக்கலாம். இவ்விரு அதிகார மையங்களும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பரஸ்பர நலன் கருதி இத்தேசங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று கூட்டாக சில ஏற்பாடுகளுக்கு இணங்க முன்வரும் போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும். அத்தகைய பிரச்சினைத் தீர்வானது அரசை மாற்றியமைக்கும் (transformation) செயற்பாடாக அல்லாமல் அரசை உருவாக்கும் (formation) செயற்பாடகவே அமையும். இதன் மூலம் தமிழ்த்தேசமும், சிங்கள தேசமும் இணைந்து செயற்பட்டு அவையிரண்டும் சுதந்திர தேசங்களாக ஆனால் தாங்கள் தமக்கிடையே இணங்குகின்ற சில துறைகளில் இறைமையை ஒருங்கிணைத்து(pool) செயற்படத்தக்க பொறிமுறையொன்றினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இறைமையுள்ள இருவேறு தேசங்கள் தமக்குள் இணங்கிக் கொண்டவாறு சில விடயங்களில் தமது இறைமையை ஒருங்கிணைப்பதன்(pool)மூலம் ஒரு அரசை அமைத்துக் கொள்ளமுடியும். இதுவே எமது கட்சியின் தாரக மந்திரமான “இரு தேசங்கள், ஒரு நாடு” என்பதன் உட்பொருளாகும்.

அத்தகையதொரு படிமுறை மூலம் இன்றுவரை நாம் எதிர்கொண்டுவரும் கீழ்க்காணும் குறைபாடுகளை நீக்க முடியும்:

- தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் சம அந்தஸ்த்தைப் பெறும் - இது இல்லாததே தற்பாதைய பிரச்சினைக்கு மூலகாரணமாகும்.
- பெரும்பான்மை வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும்
- தீவின் பல்லினத் தன்மை அங்கீகரிக்கப்படும்.
- மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு இது அமைவானதாகும்.

தொகுப்பு - கோணேஸ்

# ஈழத் தமிழருக்கு துரோகமிழைத்த காங்கிரசுக்கு தேர்தல் மூலம் மரண அடி கொடுத்த தமிழக மக்கள்



இந்திய சுதந்திரத்திற்கு முன்பு தற்போதைய தமிழகமும், ஆந்திராவும் ஒரே மாநிலமாக சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்டு வந்த போது நடைபெற்ற முதலாம் தேர்தல் 1919-ம் ஆண்டு நவம்பர் 30ந் தேதி முதல், இப்பொழுது கடைசியாக 2011-ல் நடைபெற்ற 14-வது சட்ட மன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு, தமிழர்கள் கொடுத்த மரண அடி போல ஒரு அடியை இதுவரை கொடுத்ததே இல்லை எனலாம்.

1919-ல் மாண்டேட்-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின்படி நடைபெற்ற முதலாம் தேர்தலில் பார்ப்னரல்லாதாரின் கட்சியான நீதிக்கட்சியை தோற்கடிக்க வேண்டும் என்று ஹோம் ரூல் என்ற இயக்கதை ஒரு பிரிவாக பின்னுக்கு வைத்துக் கொண்ட பார்ப்பனர்களின் மொத்த குத்தகையான காங்கிரஸ் கட்சி தேர்தலில் தோற்றது.

பயத்தின் காரணமாய் 1923 மற்றும் 1930-களில் நடைபெற்ற பொது தேர்தல்களிலும் போட்டியிடுவதிலிருந்து ஒதுங்கி கொண்டது. 1937 பிப்ரவரியில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் 215 தொகுதிகளில் 156 பெற்ற போதும், உடனே மந்திரி சபையை அமைக்க முடியவில்லை.

சில மாத இடைவெளிக்கு பின்னர், அதாவது 1937 ஜீலையில் இராஜாஜி முதல்வராய் பதவி ஏற்றுக் கொண்டார். இரண்டு ஆண்டுகள் முடிந்த தருவாயில் 21.02.1940ல், பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழைப்பதில்லை என்ற காங்கிரஸ் தீர்மானத்தின் அடிப்படையாலும், 1938-ல் தொடங்கிய இந்தி எதிர்ப்பலையை சமாளிக்க முடியாத இராஜாஜி தன்னுடைய அமைச்சரவையை கலைத்து விட்டார். பிறகு 1946-ல் சென்னை மாகாண சட்டமன்ற தேர்தலில் 205 இடங்களில், 165-தை காங்கிரஸ் கட்சி பிடித்து மந்திரி சபையை அமைத்தது.

1947 ஆகஸ்டுக்கு பிறகு சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல், 1952-ல் சென்னை மாகாணத்தில் இருந்த 375 தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் 360 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் தோல்வியை தழுவி 152 இடங்களை மட்டுமே தக்க வைத்து மெஜாரிட்டி இல்லாமல் இருந்தது. இத்தேர்தலில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் 233 இடங்களைப் பெற்றிருந்தன. காங்கிரசுக்கு மெஜாரிட்டி வேண்டி அன்றே குதிரை பேரம் நடத்தி, பிற எதிர்க் கட்சிகளிலிருந்த 29 சட்ட மன்ற உறுப்பினர்களை பணம் கொடுத்து காங்கிரசுக்கு விலைக்கு வாங்கி, 10 ஏப்ரல், 1952-ல் இராஜாஜி முதல்வர் பதவியினை ஏற்றுக் கொண்டார்.

தனி ஆந்திர மாநில கோரிக்கையை முன்வைத்து பொட்டி சீறி ராமுலு என்ற தெலுங்கர் 58 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்ததன்

காரணமாய், அவசர அவசரமாய் சென்னை மாகாணம் 1953 அக்டோபர் 1-ம் தேதி முதல் ஆந்திர மாநிலம் என்ற தனி மாநிலமாய் பிரிந்து சென்றது. இதற்கு பின்னரும், தமிழ் நாட்டிற்கு சென்னை மாகாணம் என்றே அழைக்கப்பட்டு வந்தது. ஆந்திரம் பிரிந்த போதும், காங்கிரசுக்கு சென்னை மாகாணத்திற்குள் உள்ள சட்ட மன்றத்தில் பெரும்பான்மையான இடங்கள் இருந்து வந்தன.

ஆனால், இராஜாஜியின் கல்விக் கொள்கையில் ஏற்பட்ட குளறுபடியால், உட்கட்சி பூசல் வலுபெற்று இராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. காங்கிரசில் கோஷ்ற்ரி வலு அன்றைக்கு காமராஜருக்கு சாதகமாய் இருந்ததால், 93 வாக்குகளில் வெற்றி பெற்று 1954 ஏப்ரலில் முதல்வரானர்.

காமராஜின் சத்துணவு திட்டம், கல்விக் கொள்கையில் மாற்றம், சென்னை மாகாணம் அல்லது சென்னை ராஜ்ஜியம் என்பதை மாற்றி தமிழில் தமிழ் நாடு எனவும் ஆங்கிலத்தில் மட்ராஸ் போன்ற சில திட்டங்களினால், 1957-ல் ஏப்ரலில் மீண்டும் காமராஜர் மந்திரி சபையை அமைக்க வாய்ப்பு கிடைத்தது. காங்கிரஸ் இந்த இரண்டாம் தேர்தலில் மொத்தமுள்ள 205 இடங்களில், 151-ல் வெற்றி பெற்றது.

இத்தேர்தலில் தான் தி.மு.க் அண்ணா தலைமையில் முதன் முதலில் போட்டியிட்ட 15 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றது.

அன்றைய காலகட்டத்தில் முதுகுளத்தூரில் நடந்த கலவரம், இம்மானுவேல் படுகொலைகள் போன்ற சிக்கல்களினால், 1957 அக்டோபரில் காங்கிரசுக்கு எதிராக சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலும் 146 பேர் வாக்களித்து வெற்றி பெற்றனர்.

இந்தக் காலகட்டத்திலேயே, 1959-ல் நடைபெற்ற சென்னை மாநகராட்சி தேர்தலிலும் காங்கிரஸ் 36 இடங்களை பிடித்து தோல்வி கண்டது. சென்னை மாநகராட்சியை தி.மு.க பிடித்துக் கொண்டது.

1962-ல் நடைபெற்ற மூன்றாம் பொதுத் தேர்தலில், மொத்தமுள்ள 206 தொகுதிகளில், காங்கிரஸ் 139 தொகுதிகளில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக காமராஜரே முதல்வரானார். தி.மு.க





இம்முறை 50 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. இந்திய அளவில் காங்கிரசின் செல்வாக்கு குறைந்ததால், காங்கிரசின் பல தலைவர்கள் கட்சிக்காக பாடுபட வேண்டி, தங்களது முதல்வர் பதவிகளை ராஜினாமா செய்தனர். காமராஜரும், தமிழ் நாட்டில் முதல்வர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதால், 1963 அக்டோபரில் பக்தவச்சலம் முதல்வர் பதவி ஏற்றுக் கொண்டார்.

இந்நிலையில் இந்திய குடியரசு நாளான 26 ஜனவரி, 1965-ல் இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்படும் என மத்திய காங்கிரஸ் அரசு அறிவித்தது. இதை எதிர்த்து தமிழகம் போர்க்களமானது. இரண்டு தமிழர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியக் குடியரசு நாளன்று தீக்குளித்து இறந்தனர். இந்திக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகம் முழுக்க உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், கறுப்புக் கொடி, இரயில் மறியல், கடையடைப்பு, இந்தி எழுத்து அழிப்பு என மாபெரும் கண்டன குரல் ஒலித்தது. திமுக இந்திய குடியரசு நாளில் கறுப்புக் கொடியை ஏற்றப் போகிறோம் என அச்சத்தை ஏற்படுத்தி ஆயிரக்கணக்கானோர் கைதானார்கள். இராஜாஜி கண்டன அறிக்கை வெளியிட்டார். கி.ஆ.பெ. விசுவநாதம் மற்றும் தமிழக தலைவர்கள் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் நடாத்தி எதிர்ப்பைப் பதிவு செய்தனர். இவைகளையெல்லாம் எதிர்த்த காங்கிரஸ் ஆட்சியில் அமர்ந்து கொண்டும் காவல்துறையை ஏவி, பெப்ரவரி 10-ம் தேதியில் ஒரே நாளில் 7 இடங்களில் தமிழகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 24 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

அதுபோல் பெப்ரவரி 12-ல் நடந்த காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் 12 ஊர்களில் 31 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இது தவிர கண்ணீர்ப் புகைக் குண்டுகளும், தடியடிகளும் காவல்துறையால் நடாத்தப்பட்டது. இந்திக்கு எதிரான போராட்டம் கட்டுக்கடங்காமல் போகவே இராணுவம் வரவழைக்கப்பட்டது. இதனிடையில், தமிழக முதல்வர் பக்தவச்சலம் ஆங்கிலம் நீடிப்பதற்கு சட்டம் இயற்றப்படும் என்றும் சிறையில் இருக்கும் மாணவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் இந்தி எதிர்ப்புப் போர் 12 பிப்ரவரி 1965ல் திரும்பப் பெறப்பட்டது.

போராட்டங்கள் திரும்பப்பட்டதும், இந்தி எதிர்ப்பில் ஈடுபட்ட தமிழ்த் தலைவர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரை அரசு தேசிய பாதுகாப்புச் சட்டப்படி சிறை

பிடித்தது. தமிழகத்தின் இந்தி எதிர்ப்பின் தாக்கம், இந்திய பாராளுமன்றத்தில் 17 பெப்ரவரி 1965-ல் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் "இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற நேருவின் வாக்குறுதி நிறைவேற்றுவோம்" என்று பேசுமளவிற்கு எதிரொலித்தது.

இந்த வரலாற்றுப் பிண்ணனிகளோடு, காங்கிரஸ் 1967 சட்டமன்ற தேர்தலை எதிர்நோக்கியது. 233 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி 49 இடங்களில் மட்டும் வெற்றி பெற்றது. இத்தேர்தலில் காமராஜர், பக்தவச்சலம், கக்கன், என முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். திமுக 138 இடங்களில் வெற்றி பெற்று 6-ம் தேதி மார்ச் 1967-லில் அண்ணாவின் தலைமையில் ஆட்சியமைத்தது. உடல் நலக்குறைவு காரணமாய் அறிஞர் அண்ணா 14 ஜனவரி, 1969ல் காலமானார். வரலாற்று முடிச்சுகளை திறமையாக கையாண்ட கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன் மூத்தவராய் இருந்தாலும், அவரை புறம் தள்ளிவிட்டு, 10.2.1969-ல் முதல்வரானர். 1971-ல் தமிழக சட்டமன்ற தேர்தல், பாராளுமன்ற தேர்தலும் நடந்தது. காமராஜ் அவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து, ஸ்தாபன காங்கிரஸ் என்ற புதிய கட்சியை துவக்கியிருந்தார். ஆனால், இத்தேர்தலில் இந்திரா காந்தி தலைமையில் உள்ள இ.காங்கிரசுடன் மட்டும் கூட்டணியை தி.மு.க ஏற்படுத்திக் கொண்டு 10 பாராளுமன்ற தொகுதிகளை இ.காங்கிரசுக்கு, தி.மு.க விட்டு கொடுத்தது.

சட்டமன்ற தேர்தலில் இ.காங்கிரசின் ஆதரவை மட்டும் பெற்றுக் கொண்டு, தொகுதி ஒதுக்கீடு இல்லாமல், 201 தொகுதிகளில் தி.மு.க போட்டியிட்டு, 183-ல் வெற்றி பெற்றது. தமிழக சட்டமன்றத்தின் மொத்த இடமான 251-ல் தி.மு.க, இ.காங்கிரசுடன் பிற கட்சிகளை கூட்டணியில் சேர்த்து, 209 தொகுதிகளை வென்றது. அசுர பலம் கொண்ட தி.மு.க கூட்டணி அரசு பதவி ஏற்றதும் 23 ஆண்டுகளாய் இருந்து வந்த மதுவிலக்கை ரத்து செய்து கள்ளுக்கடை மற்றும் சாராயக்கடைகளை திறந்தது.

எம்.ஜி.ஆர்-ரை விலக்கி வைக்க கருணாநிதி திட்டமிட்டு கருணாநிதியின் ஆதரவு செயற்குழுவை கூட்டி எம்.ஜி.ஆர், தி.மு.க -வுக்கு எதிராக செயல்பட்டார் என குற்றம் சுமர்த்தி முதலில் இடைக்காலமாக எல்லா கட்சி பொறுப்புகளிலிருந்தும் விலக்கி வைத்தார். இதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர், தி.மு.க.வினரின் சொத்துக்கள் பற்றியும் அவர்களின் சொந்தக்காரர்களின் சொத்துக்கள் பற்றியும் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தன்னுடைய கணக்கையும் காட்ட தயார் எனவும் சவால் விட்டார். இதற்குப்பின் தி.மு.கழகத்திலிருந்து எம்.ஜி.ஆர். அடியோடு நீக்கப்பட்டார் என தி.மு.க பொதுக்குழு 14 அக்டோபர் 1972-ல் அறிவித்தது.

எம்.ஜி.ஆர். 18 அக்டோபர் 1972-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை வெகு விமர்சையாக தொடங்கினார். இக்கட்சிக்கு 13 நாட்களுக்குள் தமிழகம் முழுவதும் 6 ஆயிரம் கிளைகள் தொடங்கப்பட்டது. 20 மே 1973-ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் அ.தி.மு.காவின் மாயத்தேவர் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

இந்திரா காந்தியின் தேர்தல் வெற்றி செல்லாது என அலகாபாத் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் பதவி நீடிப்பை தொடர இந்திரா நெருக்கடி நிலையை அமுல்படுத்தினார். தமிழகத்தில் தி.மு.க.வின் ஆட்சி கலைக்கப்பட்டது. 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். எம்.ஜி.ஆர் கொடுத்திருந்த புகாரின் அடிப்படையில் தி.மு.க.வின் மீது மத்திய அரசு சர்க்காரியா கமிஷன் ஒன்றை அமைத்து விசாரித்தது.

நெருக்கடி நிலை 1977-ல் படிப்படியாக தளர்த்தப்பட்டது. பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இந்திரா தலைமையிலான இ.காங்கிரஸ் இடம் பெற்றது. தேர்தல் முடிவில் அ.தி.மு.க 19 இடங்களையும், இ.காங்கிரஸ் 14 இடங்களையும் பிடித்து அ.தி.மு.க. கூட்டணி 40 இடங்களில், 36

இடங்களை பிடித்தது. தமிழக சட்டமன்ற தேர்தல் 1977 ஜீன் மாதம் நடைபெற்றது. இதில் இ.காங்கிரஸ் கட்சி, இடது கம்யூனிஸ்டுடன் சேர்ந்து போட்டியிட்டு மொத்தமுள்ள 234 தொகுதிகளில், வெறும் 48 இடங்களை பெற்றது. அ.தி.மு.க. கூட்டணி 130 இடங்களை மேல் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்தது.
நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக! என்ற முழக்கத்தை வைத்து கருணாநிதி 1980 ஜனவரியில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்து 23 தொகுதிகளில் இ.காங்கிரசும் 16 தொகுதிகளில் தி.மு.க.வும் வெற்றி பெற்று மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைத்தது.
பதவியேற்று சில நாட்களில் தமிழகத்தில் எம்.ஜி.ஆரின் ஆட்சி கலைக்கப்பட்டது. 1980 மே-யில் தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க, இ.காங்கிரஸ் கூட்டணி 68 இடங்களை மட்டுமே பிடிக்க முடிந்தது. அ.தி.மு.க. கூட்டணி162 இடங்களை கைப்பற்றி ஆட்சியமைத்தது.



1982 ஜீன் மாதம் 18-ம் தேதி, அ.தி.மு.க.வில் ஜெயலலிதா சேர்ந்தார். படிப்படியாக கட்சியில் பதவிகள் வழங்கப்பட்டது. இந்நிலையில் 1984-ம் ஆண்டு அக்டோபரில் எம்.ஜி.ஆரின் உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தொடர்ந்து அமெரிக்காவில் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.
1984-ல் தமிழக சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டு, ராஜீவ் தலைமையிலான இ.காங்கிரஸ்- அ.தி.மு.க. கூட்டணி அமைக்கப்பட்டது. இதில் அ.தி.மு.க 132 இடங்களையும், இ.காங்கிரஸ் 62 இடங்களையும் பெற்று கூட்டணி ஆட்சி அமைக்க வழிகோலப்பட்டது. அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த எம்.ஜி.ஆருக்கு வெற்றி செய்தி அறிவிக்கப்பட்டது. பிப்ரவரி 1985-ல் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் முதல்வர் பதவியேற்றார்.
எம்.ஜி.ஆர். அவர்கள் அ.தி.மு.க என்ற தனி கட்சி ஆரம்பித்து தேர்தலில் நின்றது முதல் தொடர்ந்து வெற்றி பெற்று 23 டிசம்பர் 1987 நள்ளிரவு இறக்கும்வரை தமிழக முதல்வராய் பதவிவகித்தார். எம்.ஜி.ஆர். மறைந்த அந்நாளிலேயே தற்காலிக முதல்வராய் நெடுஞ்செழியன் பதவியேற்றார். முதல்வர் பதவியில் தொடர விரும்பிய நெடுஞ்செழியனை எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி அம்மாளுக்கு மெஜாரிட்டி உள்ளதென ஆளுனர் அவர்களுக்கு சொல்லப்பட்டதால் ஜானகி தலைமையில் மந்திரி சபை 6 ஜனவரி 1988-ல் பதவியேற்றது. இருப்பினும் மெஜாரிட்டியை நிருபிக்க தவறியதால் 24 நாட்களேயான ஜானகி அரசை 30 ஜனவரியன்றே மத்திய அரசு கலைத்துவிட்டதாய் அறிவித்து இந்திய குடியரசு தலைவர் ஆட்சிக்குறப்படுத்தியது.
21 ஜனவரி 1989 அன்று தமிழக சட்டமன்றத்திற்கு ஒன்பதாவது தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் இ.காங்கிரஸ் தனியே கூட்டணி அமைத்து 208 தொகுதிகளில் களமிறங்கி, வெறும் 26 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தி.மு.க கூட்டணி 202 தொகுதிகளில் போடட்டியிட்டு 151 இடங்களில் தனித்து வெற்றி பெற்று, கிட்டத்தட்ட


13 ஆண்டுகள் கழித்து மீண்டும் 27 ஜனவரி 1989 அன்று கருணாநிதி முதல்வராய் பதவியேற்றார். ஆனால் மத்தியில் ஆண்ட சந்திரசேகர் அரசு இரண்டு ஆண்டுகளில் கருணாநிதி அரசை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டது. 1991 ஜீன் மாதம் பத்தாவது சட்டமன்ற தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க, இ.காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. அ.தி.மு.க. 163 இடங்களிலும், இ.காங்கிரஸ் 61 இடங்களையும் பிடித்து ஆட்சியை அமைத்தது. துறைமுகம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கருணாநிதி தன்னுடைய எம்.எல்.ஏ பதவியை ராஜினமா செய்தார். 1996 மே-இல் நடைபெற்ற 11வது சட்ட மன்றத் தேர்தலில் மீண்டும் தி.மு.க வெற்றி பெற்று 4வது முறையாக கருணாநிதி ஆட்சியை பிடித்தார். இத்தேர்தலில் பி.வி. நரசிம்மராவ் ஜெயலலிதாவுடன் கூட்டு சேர எண்ணிய போது அதை எதிர்த்து மூப்பனார் தலைமையில் தமிழ் மாநில காங்கிரஸ் உருவாயிற்று. தி.மு.க.வுடன் தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி அமைத்து போட்டியிட்டு 39 இடங்களையும், தி.மு.க. 167 இடங்களில் வெற்றி பெற்றன. அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட இ.காங்கரசுக்கு ஒரு இடம் கூட கிடைக்காமல் படுதோல்வியடைந்தது.
2001-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற 12-வது தமிழக சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில், இ.காங்கிரசுக்கு 7 இடங்களும், மூப்பனார் தலைமையில் உள்ள தமிழ் மாநில காங்கிரசுக்கு 22 இடங்களும் அ.தி.மு.க -விற்கு 132 இடங்களை பெற்று இரண்டாம் முறையாக ஜெயலலிதா முதல்வர் பதவியேற்றார். தி.மு.க அணி 28 இடங்களை பெற்று தோல்வி கண்டது. முதல்வரான ஜெயலலிதாவின் வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், உச்ச நீதி மன்றம் 21.9.2001 அன்று வழங்கிய தீர்ப்பையடுத்து, பதவி விலகிய ஜெயலலிதா தனது கட்சியின் மூத்த அமைச்சரான பன்னீர்செல்வம் அவர்களை முதல்வராக்கி ஆட்சியை நடத்தி வந்தார். பின்னர் ஆண்டிப்பட்டியில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வர் பதவியில் ஜெயலலிதா அமர்ந்தார்.

08.05.2006-ல் தமிழக சட்டமன்றத்திற்கு 13வது முறையாக தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இணைந்து கொண்டு, 163 இடங்களில் தி.மு.க.வும், 69 இடங்களில் காங்கிரசும் வெற்றி பெற்று கருணாநிதி 5 ஆம் முறையாக முதல்வர் பதவியேற்றார். ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணிக்கு 77 இடங்களில் வெற்றி பெற்றன. தற்போது 2011 மே மாதம் நடைபெற்ற 14வது சட்ட மன்ற தேர்தலில், அ.தி.மு.க. கூட்டணி தனி பெரும்பான்மை பெற்று மொத்தமுள்ள 234 தொகுதிகளில், 203 தொகுதிகளை பிடித்து ஆட்சி அமைக்கிறது. தி.மு.க காங்கிரஸ் கூட்டணி 31 இடங்களை மட்டும் பெற்று தோல்வி முகத்தை தழுவியுள்ளன. இதில் காங்கிரஸ் 63 தொகுதிகளில் போட்டியிட்டு வெறும் 5 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. சுருக்கமாக சொல்லுவதெனில் இந்திய சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் தேசிய கட்சியான காங்கிரஸ் என்பது தமிழகத்தை பொறுத்தவரையில், தமிழகத்தில் உள்ள தலைவர்கள், தேசிய கட்சியில் செல்வாக்கு வைத்திருந்தால் மட்டுமே, காங்கிரஸ் என்ற தேசிய கட்சிக்கு சிறிதளவாவது இடம் வெற்றி பெற வாய்ப்பிருந்துள்ளது. அதுவும் 1965க்கு பின்னர் மாநில கட்சி ஒன்றுடன் சேர்ந்து போட்டியிட்ட தாலேயே சில வேளைகளில் சொல்லும்படியான சில தொகுதிகளில் வெற்றி பெற்று வந்துள்ளது தெளிவாய் தெரிகிறது. 2009 மே முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழ் படுகொலைக்குப் பின்னர் கடைக்கோடி யில் உள்ள தமிழக மக்களுக்கு தங்களது தொப்புள் கொடி உறவுகளான ஈழ தமிழர்களின் படுகொலைக்கு பின்புலமாய் இருந்து துரோக மிழைத்த தி.மு.க மற்றும் காங்கிரஸ் கூட்டணி இனி எப்போதும் எழுந்து விடா வண்ணம் மரண அடியை இந்த தேர்தல் முடிவுகளால் கொடுக்கப் பட்டுள்ளதை யாராலும் மறுக்க இயலாதது. மரணமடைந்து அஸ்தமித்து விட்ட காங்கிரஸ் என்னும் துரோக கட்சி இனி எக்காலத்திலும் மேலே தலை தூக்க முடியாதபடி தமிழக மக்கள் குழி தோண்டிப் புதைத்து பூசை செய்து நடுகல் ஒன்றையும் நினைவாக வைத்து விட்டனர். ●

## ஐரோப்பிய ஒன்றிய வளாக மாநாடு புலிகளின் ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதாம்

**–ரவிநாத் ஆரியசிங்க**

கடந்த 01-06 2011 அன்று ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றக் கட்டடத்தில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக கூட்டப்பட்ட மகாநாடு புலிகளது அனுதாபிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், மாநாட்டில் புலிகளுக்கு ஆதரவான தமிழ் சமூகத்தினரும், புலிகளுக்கு ஆதரவாக நீண்டகாலம் செயற்பட்டு வந்துள்ள வை.கோபால்சாமி மற்றும் இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் போன்றோரே கலந்து கொண்டுள்ளனர் என்றும் பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சிறிலங்கா தூதர் ரவிநாத் ஆரியசிங்க அவர்கள் கூறியுள்ளார். அத்துடன் சென்னையைச் சேர்ந்த வைகோ அவர்கள் நீண்டகாலமாக சட்டசபை உறுப்பினராக இல்லை என்றும் செல்வராசா கஜேந்திரன் அவர்களுக்கு 2010 ஆம் ஆண்டு இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான இடத்தினை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்றும் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலையில் உயிர்களைத் தியாகம் செய்தவர்களை நினைவு கூரும் வணக்க நிகழ்வு 18.5.2011 அன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் யாழில் நினைவுகூறப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்



பரவி இருக்கிறார்கள். மொழி மற்றும் கலாச்சார பாரம்பரியத்தில் ஒற்றுமையுடன் திகழும் இலங்கைத் தமிழர் களுக்கும், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் இடையே உள்ள தொப்புள் கொடி உறவு அனைவரும் அறிந்த ஒன்றாகும். இலங்கைக்கு விடுதலை கிடைத்து விட்டாலும், அங்கு வாழும் தமிழர்கள் அவர்கள் நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதை எதிர்த்து. இலங்கைத் தமிழர்கள் பல்லாண்டு காலமாக போராடி வந்தனர். இவர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்து தேவையான அரசமைப்புச் சட்டத்திருத்தங்களை கொண்டு வந்து, தமிழர்கள் கௌரவத்துடனும், சம உரிமையுடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதை

# இலங்கையை வழிக்குக் கொண்டுவர அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்

## தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

தமிழர்களைத் தாக்கிய இலங்கை ஒரு போர்க்குற்றவாளி. அந்த நாட்டை வழிக்குக் கொண்டு பொருளாதார தடை விதிப்பதே ஒரே வழியாகும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

தமிழக சட்டசபையில் 08-06-2011 அன்றுஇலங்கைக் குக் கடும் கண்டனம் தெரிவிக்கும் ஒரு தீர்மானத்தை முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்தார். மேலும் இலங்கை மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தீர்மானத்தைத் தாக்கல் செய்து முதல்வர் ஜெயலலிதா பேசியதாவது:

தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல. யாரையும் தாழ்த்துவதல்ல என்றார் பேரறிஞர் அண்ணா. இப்படிப்பட்ட உயரிய எண்ணத்தைக் கொண்ட தமிழர்கள் உலகெங்கும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்காமல் அவர்களை முற்றிலும் ஒழித்துக்கட்ட இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தது.

பரவலாக குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்களை கொன்று குவித்தது. மனிதர்கள் வாழும் இடங்களின் மீதும், மருத்துவ மனைகள் மீதும் குண்டுகளை வீசியது. மனிதாபிமான முறையில் செய்ய வேண்டிய உதவிகளை செய்ய மறுத்தது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படக்கூடியர்கள் உள்பட இந்தச் சண்டையில் பலியானவர்கள் மற்றும் எஞ்சியுள்ளவர்கள் மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது.

இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதிக்கு வெளியே இருப்பவர்கள் மீது மனித உரிமை மீறல்களை

நிகழ்த்தியது. போன்ற கடுமையான, நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை உள்நாட்டுப்போரின் போது இலங்கை அரசு நிகழ்த்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட குழு கண்டறிந்து இருக்கிறது. எனவே, இத்தகைய போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க்குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி, சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழவகை செய்யும் வரையில், அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை இந்திய அரசை கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க்குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி, சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழவகை செய்யும் வரையில், அனைத்து குடியுரிமை களையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்றய நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை இந்திய அரசை கேட்டுக் கொள்கிறது.

இங்கே பேசிய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சௌந்தரராஜன் அவர்கள், பொருளாதாரத் தடையைக் கொண்டு வர வேண்டுமென்ற வரிகளை விலக்கிக் கொண்டால் என்ன என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார். இதனால் அப்பாவித் தமிழ் மக்களும் பாதிக்கப்படுவார்களே என்ற ஒரு கருத்தைச் சொன்னார்.

இப்போதே இலங்கை அரசு யாருக்கும் பணியவில்லை. அங்கே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு சிங்களர்களோடு அனைத்து உரிமைகளையும், குடியுரிமைகளையும் வழங்க வேண்டுமென்று இந்தியா சொன்னாலும், யார் சொன்னாலும், அவர்கள் அதை மதிக்கவில்லை. அதனால், அவர்களை எப்படி வழிக்குக் கொண்டு வருவது, அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்கு ஒரே வழி பொருளாதாரத் தடைகள்தான். இதுவொரு தற்காலிகமான ஒரு முறைதான்.


இந்திய அரசும், இன்னும் சில நாடுகளும் இணைந்து, இலங்கை அரசின்மீது ஒரு பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்தால், குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் சொல்வதை இலங்கை அரசு கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படும். வேறு வழியில்லை என்பதற்காகத்தான் இதைச் சேர்த்திருக்கிறோம். இந்தத் தீர்மானத்தின் மீது இங்கே கருத்துத் தெரிவித்து உறுப்பினர்கள் பேசுகின்றபோது, ஐ.நா. சபை ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று அறிவித்து விட்டதாக இங்கே தெரிவித்தார்கள். அப்படியில்லை. ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, அவர்கள் அங்கே நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்களைப் பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

அந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையில், இப்படிப்பட்ட போர்க் குற்றங்களெல்லாம் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது அங்கே வாழ்கின்ற தமிழ் மக்கள் மீது இத்தகைய குற்றங்களெல்லாம், கொடுமைகளெல்லாம் நிகழ்த்தப்பட்டன என்பதையெல்லாம் தெரிவித்துவிட்டு, இதனை இலங்கை அரசே விசாரிக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, இதை உறுதியும் செய்யவில்லை – ராஜபக்சேவோ, மற்றவர்களோ போர்க் குற்றவாளிகள் என்று ஐ.நா. சபை அறிவிக்கவும் இல்லை.

அதனால் தான் இந்தத் தீர்மானத்தில் இந்திய அரசு போர்க் குற்றம் புரிந்தவர்களை, போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த வேண்டும், இதற்கு ஐ.நா. சபையை வலியுறுத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, மனிதாபிமானமற்ற முறையில் ஈவு இரக்கமின்றி பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்குக் காரணமானவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்றும் இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முழு மறுவாழ்வு அளித்து, அவர்கள் வசித்த இடங்களிலேயே அவர்களை மீண்டும் குடியமர்த்தி சிங்களர்களுக்கு உரிய அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்களுக்கு இலங்கை அரசு வழங்கும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி, அரசு சார்பில், என்னால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார் ஜெயலலிதா.

உலக அரசியல்

# கடாபியும் மேற்கு உலகமும்



நேட்டோவின் குண்டுத் தாக்குதல்களிலும், தனக்கு எதிரானவர்களின் (லிபியக் கிளர்ச்சியாளர்கள்) படுகொலை முயற்சிகளிலிருந்து தப்புவதற்காகவும் மறைந்து வாழ்ந்து வரும் லிபியத் தலைவர் கேணல் முவம்மர் கடாஃபி ஒவ்வொரு இரவையும் வேவ்வேறு மருத்துவமனைகளில் கழித்து வருவதாக புலனாய்வுத் தகவல்களை ஆதாரம் காட்டி செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால், அவற்றை பொய்யாக்கும் வகையில் தாக்குதல் நடைபெறும் இடத்திலேயே சந்திப்புக்களை நடாத்தியுள்ளார் கடாபி.

லிபியா மீதான நேட்டோவின் கடுமையான தாக்குதல்களுக்கு மத்தியில் தலைநகர் திரிப்பொலிக்குச் சென்று கேணல் முவம்மர் கடாபியுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜகொப் ஜுமா. மோதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அவர் மேற்கொண்டுள்ள இரண்டாவது பயணம் இது என்றபோதும், தலைநகர் திரிப்பொலியில் நேட்டோவின் கடுமையான தாக்குதல் நடைபெறும் நிலையில் மேற்கொண்ட பயணமாக இது இருக்கின்றது.

இவரது பயணத்திற்கு முன்பாக இவரது ஆளும் ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் நேட்டோவின் குண்டுத் தாக்குதல்களை கடுமையாகக் கண்டித்திருந்தது. ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் கட்சியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்குலகப் படைகள் லிபியா மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் தாக்குதல்களை உலகில் அமைதியை விரும்பும் மக்களுடன் இணைந்து நாம் கண்டிக்கிறோமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், திரிப்பொலியில் உள்ள இலக்குகள் மீது அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் தொடர்ச்சியான தாக்குதலில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த நிலையில், இம்மாத முற்பகுதியில் திரிப்பொலி விமான நிலையத்தை சென்றடைந்த தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு கடாஃபி செங்கம்பளம் விரித்து வரவேற்பளித்துள்ளார்.

கடாபியின் சார்பில் பிரதமர் பாக்தாதி அல் முக்மூதி விமான நிலையம் சென்று அவரை வரவேற்று அழைத்துவந்தார். நேட்டோப் படையினரின் தாக்குதலுக்கு இலக்கான கடாபியின் ஃபாப் அல் அஜிஜியா வளாகத்தில் அவர் கடாபியை சந்தித்து பேசினார். இந்த வளாகத்தின் மீது நேட்டோ இராணுவம் கடந்த வாரமும் கடுமையான விமானத் தாக்குதல் நடத்தியிருந்தது. இந்த மாளிகை கடாபியின் தங்குமிடம் மட்டும் அல்ல, இது இராணுவம் மற்றும் உளவு படையின் தலைமையகமாகவும், இராணுவத் தளமாகவும் செயல்பட்டு வருகிறது. இந்த மாளிகைக்குள் கடாபியின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு என்று தனியான வீடுகளும் இருக்கின்றன. இந்த வீடுகள் மீதும் நேட்டோ இராணுவம் கடுமையான தாக்குதலை நடத்தியிருந்தது.

இந்நிலையில் அங்கு சென்றிருந்த ஜனாதிபதி ஜகொப் ஜுமா உடனடியான போர் நிறுத்தம், மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பது, மோதல்களுக்கு காரணமாக இருக்கும் பிரச்சினைகளை களையும் வகையில் அரசியல் சீர்திருத்தம் கொண்டு வருவது ஆகியவற்றை விரைந்து செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை கடாபியுடன் நடத்தியிருந்தார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குப் பதிலளித்த தென் ஆபிரிக்க ஜனாதிபதி, கடாபி போர் நிறுத்ததிற்கு தயாராக இருக்கிறார் என்று அறிவித்தார். ஆபிரிக்க ஒன்றியத்தின் தலையீட்டில் ஒரு போர் நிறுத்தத்தை கொண்டு வருவதற்கு கடாபி தயாராக இருப்பதாகவும் அதன் மூலம் அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்துவதற்கு வழி ஏற்படும் என்றும் ஜகொப் ஜூமா தெரிவித்தார். நாட்டின் வருங்காலம் குறித்து தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க லிபிய மக்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கலாம் என்று கடாபி தெரிவித்துள்ளதாக கூறிய ஜூமா, கடாபி பதவி விலகத் தயாரில்லை என்றும் அவர் பதவி விலகமாட்டார் என்றும் குறிப்பிட்டார்.

ஆனால், கடாபி பதவி விலக வேண்டும் என்பதுதான் 28 நாடுகளைக் கொண்ட நேட்டோ கூட்டமைப்பின் முக்கிய கோரிக்கையாக இருக்கின்றது. கடாபி பதவி விலக மறுத்து விட்டதைத் தொடர்ந்து திரிபோலி மீது நேட்டோ இராணுவம் விமான தாக்குதலை கடுமையாக்கியுள்ளது. அத்துடன், லிபியா மீதான தாக்குதலை மேலும் 90 நாட்களுக்கு நீடிக்க நேட்டோ நாடுகள் அனுமதியும் வழங்கியுள்ளன. லிபியாவில் மக்களைக் காக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவதென முடிவு செய்துள்ளோம். இது அதிபர் கடாபிக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையும் ஆகும். என்று நேட்டோ வெளியிடடுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடாபியின் இலக்குகளை கண்டறிந்து தாக்குதவதற்காக அதிநவீன தாக்குதல் உலங்குவானூர்திகளை பிரித்தானியாவும், பிரான்சும் அனுப்பியுள்ளன. இது கடாபியைக் கொலை செய்வதற்காகவே என லிபிய அரசு குற்றம் சாட்டியுள்ளது. அத்துடன், நேட்டோவின் தாக்குதலில் 718 பொது மக்கள் இதுவரை பலியாகியுள்ளதாகவும் லிபிய அரசாங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

முன்னதாக, கடந்த மாதம் 26ம், 27ம் திகதிகளில் பிரான்சில் கூடிய ஜி8 நாடுகளின் தலைவர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையிலும் கேணல் கடாபி ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர். அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்களே இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளனர். இதில், கேணல் கடாபியின் படைகளுக்கு எதிரான நேட்டோ தாக்குதலை விமர்சித்து வந்த ரஷ்யாவும் இப்போது கடாபி பதவி விலக வேண்டும் எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. லிபியாவை ஆட்சி செய்வதற்கான நியாயபூர்வ தன்மையை கடாபி இழந்துவிட்டார் என ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ் இதன்போது தெரிவித்துள்ளார். லிபியா ஒரு சுதந்திரமான நாடாக நீடிக்க வேண்டும் என ரஷ்யா விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கடாபியை பதவி விலகச் செய்வதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க ரஷ்யா தயார் என ரஷ்ய பிரதி வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி ரியாப்கோவ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடாபியை பதவி விலக வேண்டுமென வலியுறுத்தியுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலா சாகோசி, நேட்டோவின் தலையீட்டையும் நியாயப்படுத்தியுள்ளார். அத்துடன், கடாபி நாட்டை விட்டு வெளியேறி அஞ்ஞாதவாசம் இருக்க வேண்டுமென நாம் கூறவில்லை எனத் தெரிவித்திருக்கும் அதிபர் சாகோசி, அவர் அதிகாரத்தைக் கைவிட வேண்டும். மிக விரைவில் இதனைச் செய்ய வேண்டுமெனவும் எச்சரித்துள்ளார். அத்துடன், கடாபி பதவி விலகி விரைவில் தனது படைகளை திரும்பப் பெற்றால் அவருக்கான அனைத்துத் தெரிவுகளும் திறந்தே இருக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் எந்த நாட்டுக்கான விமானப் பயணச்சீட்டு அவர் எடுக்க வேண்டும், விமானத்தின் எந்த வகுப்பில் அவர் பயணிக்க வேண்டும் என்பது குறித்து நாம் ஆராய்வோமெனவும் சாகோசி நகைச்சுவையாகக் கூறியுள்ளார்.

மேற்குலகம் கடாஃபியை அகற்றுவதில் உறுதியாக இருக்கின்றது. ஆபிரிக்க ஒன்றியம் கடாஃபியையும் காப்பாற்றி போரையும் முடிவுக்கு கொண்டுவர முயல்கின்றது. இதில் யார் வெற்றி பெறப்போகின் றார்கள் என்பது அவர்களின் பலத்தைப் பொறுத்தது. ஆனால், அதற்கு முன்பாக லிபியா இன்னும் பல பேரழிவுகளைச் சந்திக்கப்போகின்றது என்பது மட்டும் தெளிவாகின்றது.



# உலகத்திற்கு வழிகாட்டும் முதல் திட்டம் — அணுமின் நிலையங்களை மூட முடிவு

ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டபோது அங்கு உள்ள புகுஷிமா அணுமின் நிலையத்தில் விபத்து ஏற்பட்டு அணுக்கதிரியக்கம் வெளியேறி மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து, அணுமின் நிலையங்களுக்கு எதிராக பல நாடுகளிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக ஜேர்மனியிலும் இதற்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்கள் இடம்பெற்றுவந்தன. செர்னோபில் அணு உலை கதிர்வீச்சால் ஜேர்மனி கடுமையாக பாதிக்கப்பட்டது. அப்போதிருந்தே ஆயிரக் கணக்கானோர் அணுமின் நிலையங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், ஜேர்மனி தன் நாட்டில் உள்ள அனைத்து அணுமின் நிலையங்களையும் மூடுவது என்று தீர்மானித்துள்ளது. 2022ம் ஆண்டிற்குள் அணுமின் நிலையங்கள் அனைத்தும் படிப்படியாக மூடப்படுகின்றன. இதனால் மின்சார உற்பத்தி குறைந்து விடும் என்பதால், மின்சார நுகர்வையும் குறைத்துக்கொள்ள ஜேர்மனி திட்டமிட்டுள்ளது. 2020ம் ஆண்டு முதல் 10 சதவீத பயன்பாட்டை குறைத்துகொள்ள அந்த நாடு திட்டமிட்டுள்ளது.

ஜேர்மனியில் தற்போது 17 அணுமின் நிலையங்கள் உள்ளன. அந் நாட்டுக்குத் தேவையான மொத்த மின்சாரத்தில், 23 சதவீதம் இவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. ஜப்பானில் நிலநடுக்கம், சுனாமி ஏற்பட்ட பின், ஜேர்மனியில் இயங்கிவந்த மிகப் பழைய ஏழு அணுமின் நிலையங்கள் உடனடியாக மூடப்பட்டன. ஏற்கனவே ஒரு அணுமின் நிலையம் பல ஆண்டுகளாகச் செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், அந் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அணுமின் நிலையங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடக்க ஆரம்பித்துள்ள நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கெல்லின் ஆளும் கட்சியான கிறிஸ்தவ குடியரசுக் கட்சியும், அதன் கூட்டணிக் கட்சிகளும், அணுமின் நிலையங்களின் எதிர்காலம் குறித்து அவசர ஆலோசனையில் ஈடுபட்டன. அதில், வரும் 2022ம் ஆண்டுக்குள், நாட்டின் அனைத்து அணுமின் நிலையங்களையும் படிப்படியாக மூடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையின் மூலம் உலகின் அணுமின் நிலையங்களைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு வழிகாட்டியாக மாறியுள்ளது. வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில் இத்தகைய முடிவு மேற்கொண்ட முதல் நாடு ஜேர்மனி என்பது குறிப்பிடத்தக்கது. ஜேர்மனியின் இந்த முன்னுதாரணத்தினை மற்ற நாடுகளும் பின்பற்றினால் பாதுகாப்பான, பசுமையான எதிர்காலம் இவ்வுலகிற்கு சாத்தியப்படும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த முடிவு எடுக்கப்பட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மெர்கெல், எதிர்காலத்தில் மின்சாரம் என்பது பாதுகாப்பானதாகவும், நம்பத்தகுந்ததாகவும், பொருளாதார ரீதியில் கட்டுப்படியானதாகவும் இருக்க வேண்டும். ஜப்பானில் சுனாமிக்குப் பின் நிகழ்ந்த சம்பவங்கள் கண்களைத் திறந்துவிட்டன என்றார்.

இது குறித்து சுற்றுச்சூழல் அமைச்சர் நார்பெர்ட் ரோட்ஜென் கூறுகையில், இந்த முடிவு இறுதியானது. மாற்றப்படாதது. நாட்டில் மொத்தம் 17 அணுமின் நிலையங்கள் உள்ளன. அவற்றில், பழைமையான 8 அணுமின் நிலையங்களின் செயல்பாடு உடனடியாக நிறுத்தப்படும். 6 அணுமின் நிலையங்கள் 2021லும், 3 அதிநவீன அணுமின் நிலையங்கள் 2022லும் மூடப்படும் என்றார். அணுமின் உற்பத்தியின் இழப்பை ஈடுகட்டும் வகையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு ஜேர்மனி மாற வேண்டியுள்ளது. இதற்காக எரிசக்தித் துறையில் ஆராய்ச்சிக்காக அதிக நிதி ஒதுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய பாராளுமன்ற வளாக மகாநாட்டுத் தீர்மானங்கள்

சட்டத்தரணி ரட்ணவேல்




ஐரோப்பிய பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய இடதுசாரி பசுமை கட்சி மற்றும் நோடிக் இடதுசாரி பசுமைக் கட்சியும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் இணைந்து இலங்கை பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய பாராளுமன்றக் கட்டடத்தில் கடந்த 01-யூன் 2011 அன்று நடாத்திய இலங்கைப் பிரச்சினை தொடர்பான விசாரணை மாநாட்டைத் தொடர்ந்து அவர்களால் இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. ஒன்றின்பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்களால் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படாத நிலைமை தொடர்கின்றது. கடந்த முப்பதாண்டுகளாக அவர்களது உரிமைகள் மீதான தாக்குதல் பெரியளவில் கடுமையாக்கப்பட்டுள்ளது. இலங்கையை ஒரு தோற்றுப்போன நாடாகவே நாங்கள் கருதுகின்றோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஒருவரின் கட்டுப்பாட்டில் நீதிச்சேவை உள்ளிட்ட சகல அரச நிர்வாகங்களும் உள்ளதால் மக்களது சனநாயக மற்றும் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்ய இயலாத ஒரு நிலை அங்கே தொடர்கின்றது.

2. *2009*ம் ஆண்டு மே மாதத்தில் முடிவடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (எல்.ரி.ரி.ஈ.) எதிரான யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சிவிலியன்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாற்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்களை இலங்கைப் படைகள் கொன்றன என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றோம். "துப்பாக்கிச் சூடற்ற வலையம்" என்று அவர்கள் கூறிய வலையத்தினுள் அமைந்திருந்த தள மருத்துவ மனைகள், இடைத்தங்கள் பாடசாலைகள் மற்றும் தற்காலிக கொட்டகைகள் யாவும் திட்டமிட்ட முறையில் குண்டுவீசித் அழிக்கப்பட்டன. அப்போது உயிர் தப்பிய 3,00,000 பேர் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு அடிப்படை வசதிகளற்ற தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் ஏற்றி இறக்கப்பட்ட வேளையிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்த போதும் கற்பழிப்புக்கள் மற்றும் கொலைகள் உள்ளிட்ட பாதகமான மனிதநேயமற்ற

துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றன.

3. கண்கண்ட சாட்சிகளின் கூற்றுக்கள், மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களின் அறிக்கைகள், சனல் 4 செய்திகள் போன்ற ஊடகங்கள் இலங்கையின் மன்னார் பிரதேச பேராயரின் சாட்சியம், 2011 ஏப்ரல் 25ந் திகதி பிரசுரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் மதியுரைக்குழுவின் அறிக்கை போன்ற திரட்டப்பட்ட பெருவாரியான சாட்சியங்களை ஆராய்ந்துள்ளோம். இவ்வறிக்கைகளின் நம்பகத்தன்மையை நாங்கள் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை போர்க்குற்றங்கள் விசாரணைசெய்யப்பட வேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

4. சுதந்திரமான விசாரணையொன்றை முன்மொழிகின்ற ஐநாவின் மதியுரைக் குழுவின் அறிக்கையை நாம் வரவேற்கின்றோம். இந்தச் சிபார்சினை இலங்கையிலுள்ள சிவில் சங்கங்களுக்கும் அரசியல் அமைப்புக்களும் வரவேற்றுள்ளமையை நாம் கருத்தில் கொண்டுள்ளதோடு, பிணக்கோடு சம்பந்தப்பட்ட ஏதேனும் அத்துடன் அனைத்து திறத்தவர்களுக்கும் எதிராக சார்த்தப்பட்டுள்ள போர்க்குற்றங்களைப் பற்றி பக்கச்சார்பற்ற சுதந்திரமான விசாரணையொன்றை ஏற்படுத்துவதை நாம் ஆதரிக்கின்றோம். அத்தகையதொரு விசாரணை உண்மையில் சுதந்திரமாக இடம்பெறவேண்டுமாயின் அது அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த ஏழை மக்களையும் உழைக்கும் வர்க்கத்தினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும், மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற, பொறுப்புவாய்ந்தோரைக்கொண்ட தீர்ப்பாயம் ஒன்றினால் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பார்வையாளர்கள் முன். மேற்கொள்ளப் படல் வேண்டும். இப்படிமுறைக்கு ஏதுவாக சர்வதேச அமைப்பொன்று அமைக்கப் படுவதை நாங்கள் ஆதரிக்கின்றோம்.

5. இலங்கை அரசாங்கத்தினால் இன்னும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களையும் அவர்களுக் கெதிராக சார்த்தப்பட்டுள்ள குற்றங்களையும் அவ்வரசு உடனடியாக வெளியிட வேண்டும். குற்றச் சாட்டுக்கள் ஏதுமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும். தடுப்பு முகாங்களை உடனே மூடுவதோடு விடுவிக்கப்படுவோரின் புனர்வாழ்வுக்கான ஏற்பாடுகளும் செய்யப்படல் வேண்டும். போரில் உயிரிழந்தவர்களைப் பற்றிய அரசிடமுள்ள தகவல்களை அரசு வெளியிடுவதோடு குடும்ப உறுப்பினர்களையும் சொத்துக்களையும் போரினால் இழந்த குடும்பங்களுக்கு உதவிகளும் வழங்கப்படல் வேண்டும்.

6. நடைமுறையில் ஆக்கிரமிப்புப் படையாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளின் நிலைகொண்டுள்ள படையினரின் தளங்களை மூடிவிடவேண்டும். தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய மற்றும் சனநாயகஅபிலாசைகளை கருத்திற் கொள்ளும் அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்படல் வேண்டும்.


7. வடக்கு கிழக்கில் தொழிற்சங்க உரிமைகளுக்காகவும் ஏனைய சனநாயக உரிமைகளுக்காகவும் நடத்தப்படும் போராட்டங்களை நாம் ஆதரிக்கின்றோம். உண்மையில் அனைத்து இலங்கையர்களும், தத்தம் இன, சமய அடையாளங்கள் கருத்திற் கொள்ளப்படாதவாறு, முழுமையானதும் சமமானதுமான உரிமைகளை பெற்றிடல் வேண்டும். கட்சிகள் அமைப்பதற்கும் கூட்டங்கள் நடத்துவதற்கும் தேர்தல்களில் போட்டியிடுவதற்குமான உரிமைகள் எல்லோருக்கும் இருக்க வேண்டு மென்பதில் நாம் உறுதியாய் உள்ளோம். செல்வந்தரின் சுரண்டுதலுக்கான கருவியாகிவிடத்தக்க சுதந்திர வர்த்தக வலையங்கள் அமைப்பதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

8. ஆயுதம் மற்றும் யுத்த உபகரணங்களை விற்பனை செய்வதையும் இலங்கை ஆயுதப்படைகளுக்கு பயிற்சியளிப்பதையும் தற்போதைய அரசுக்கு வர்த்தக மற்றும் நிதி ஆதரவுகள் வழங்குவதையும் நாங்கள் எதிர்க்கின்றோம்.

9. தமிழ்ப்பேசும் மக்கள் அவர்கள் விரும்பினால் பிரிந்து செல்லும் அதிகாரத்தினைக் கொண்ட சுயநிர்ணய உரிமை, மற்றும் சிறுபான்மை இனங்க்ளின் உரிமை ஆகியவற்றை நாங்கள் ஆதரிக்கின்றோம்.

10. இவ்வருடம் GUE/NGL உண்மை கண்டறியும் பேராளர் குழாத்தை இலங்கைக்கு அனுப்புவதற்கான எங்கள் இணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பல்சுவை




வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்; என்பது ஒரு முதுமொழி. அதேபோன்றுதான் நோய் வந்ததன் பின்னர் அதற்குத் தீர்வு தேடுவதை விட, நோய் வருவதற்கு முன்பே அதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதே சரியான மருத்துவமாக இருக்கமுடியும். அந்த வகையில் பல்வேறு ஆய்வுகளிலும், அனுபவங்களிலும் கண்டறியப்பட்ட சில மருத்துவ ரீதியான உண்மைகளை இந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பார்ப்போம். இவற்றைப் பின்பற்ற வேண்டுமா இல்லையா என்பதை உங்களது மருத்துவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இவை சில கண்டறியப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே.

**மருந்துகள் குறித்த கவனம் தேவை**

நீங்கள் மருந்துப் பொருட்களை வாங்கும்போது அதன் காலாவதி திகதியைப் பார்த்து வாங்குங்கள். காலாவதி நாள் தாண்டியிருந்தால் உடனே திருப்பிக் கொடுத்துவிடுங்கள். அதேபோல நீங்கள் ஏற்கனவே வாங்கியிருக்கும் மருந்து, மாத்திரை காலாவதி திகதியைக் கடந்து விட்டால் அதைப் பயன்படுத்த வேண்டாம்.

ஒரு நாளைக்கு மருந்து, மாத்திரையை எத்தனை முறை சாப்பிட வேண்டும் என்று மருத்துவரிடம் தெளிவாய் கேட்டு அறிந்து அதன்படி சாப்பிடுங்கள். நான்கு மணி நேரத்துக்கு ஒரு முறை என்றால் ஒரு நாளைக்கு ஆறு முறை சாப்பிட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நோய் குறையவில்லை என்பதற்காக ஒரே நாளில் அதிக முறை மருந்து சாப்பிடுவது கூடாது.

சில இருமல் மருந்து மற்றும் வலி நிவாரணி மருந்துகளை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவார்கள். இது மிகவும் தவறானது. எவ்வளவு மருந்து சாப்பிட வேண்டுமோ, அந்த அளவு மட்டும் சாப்பிடுங்கள். அதிக அளவில் மருந்து சாப்பிடுவது நோயை எந்த விதத்திலும் விரைவில் குணப்படுத்தாது. மாறாக, கூடுதல் பிரச்சினையை ஏற்படுத்திவிடும் அபாயம் உள்ளது.

சில மருந்து, மாத்திரைகளில் பெயர் ஒன்றாக இருக்கும்போதும் நிறை மாற்றமாக இருக்கும். மாத்திரையின் பெயரோடு நிறையையும் சேர்த்து அவற்றையும் ஞாபகத்தில் வைத்து வாங்க வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு மருந்து, மாத்திரை வாங்கும்போது இந்த அளவை கவனித்து வாங்குவது அவசியம்.

'மருத்துவரிடம் மருந்தின் பெயர், எத்தனை முறை வழங்க வேண்டும், எத்தனை நாள் கொடுக்க வேண்டும், உணவுக்கு முன் அல்லது பின் எப்போது கொடுக்க வேண்டும், ஏதேனும் பக்க விளைவுகள் உண்டா, ஒருமுறை மருந்து சாப்பிட்டு முடித்ததும் அதை நிறுத்திவிடலாமா இல்லை தொடர வேண்டுமா என்பதைப் போன்ற விவரங்களைத் தெளிவாகக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். சில மருந்துகளின் பெயர் ஒரே மாதிரியாக இருக்கும். ஆனால் அந்த மருந்தைத் தயாரித்த நிறுவனங்கள் வேறு வேறாக இருக்கும். அப்படி இருக்கும் பட்சத்தில் மருத்துவரின் ஆலோசனை பெற்ற பின்னர் சாப்பிடவும்.

சிறுகதை

# ஒரு நாள் ஆசை...


தீபிகா ஆனந்தன்

சமரபாகு தேவன் என்பவனும், இமையாணன் என்பவனும் இரு நெருங்கிய நண்பர்களாம்.

இருவரும் வீரத் தமிழ்த் தளபதிகள்.

இவர்கள் குறுநில மன்னர்களுக்குத் தளபதிகளாக இருந்துள்ளனர். இந்தத் தளபதிகளிடம் குதிரைப்படை, யானைப்படைகள் இருந்துள்ளன. யானைகளை கற்பூமியான தொண்டமனாற்றின் ஒரு குறித்த பிரதேசத்தில் கட்டிப் பராமரித்து வந்ததாகவும், யானைகள் கட்டப்பட்ட இடம் என்பதால் அது கொம்பன்தறை என்று அழைக்கப்பட்டு, பின் நாளில் அது மருவி கொம்மந்தறையாக மாறியதாம்.

அந்தந்தப் பிரதேசங்களை ஆண்ட



தளபதிகளின் பெயரே பின்னாளில் சமரபாகு - இமையாணன் எனும் தனித்தனி இரு பெரும் பிரிவுகளாக அழைக்கப்படுகின்றது என வித்தியனின் மாமா வித்தியனுக்குச் சொல்லிய அந்த வரலாறு ஞாபகத்திற்கு வந்தது.

இன்றும் ஏதோ ஒரு வகையில் இரண்டு பிரதேசங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்றே காணப்படுகின்றன.

சமரபாகு, வித்தியனின் சொந்த ஊர். அங்கிருந்து மூன்று கிலோ மீற்றர் சைக்கிளில் பயணம் செய்து இமையாணன் புறாப்பொறுக்கியில் நின்று பஸ் ஏறினான்.

பனங்கொட்டைகளை பாத்தியில் அடுக்குவது போல் பஸ்சிற்குள் மனிதர்களை அடுக்கியிருந்தார்கள். பஸ் கொஞ்சத்தூரம் சென்றதும் "ஏன் பஸ்சில் ஏறினான்" என்று அலுத்துக் கொண்டான்.

மூச்சு விட்டது பாதி, திணறினது பாதி என்று உலைஞ்சு உரசுப்பட்டு ஒரு மாதிரி முத்திரைச் சந்தியில் வந்து இறங்கினான். அங்கிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து கச்சேரியின் வாசல் வந்து சேர்ந்தான்.

யாழ்ப்பாணம் - கச்சேரியின் பிரதான வீதி அது. "காப்பெற்" போட்ட அகன்ற வீதி. வலுவேகமாக வாகனங்கள் ஓடிப்போகின்றன. வீதியின் அருகாக, வீதியெங்கும் நிழல் பரப்பி நிற்கும் பெரிய மரங்கள் நின்று கொண்டன.

மரங்கள் நிற்கும் காணிக்குள் பழம்பெரும் பாரம்பரியங்களை நிலைநிறுத்திக் காட்டும் பாழடைந்த கட்டடங்கள். கட்டடச் சுவர்கள் மழையில் நனைந்து பாசி பிடித்துக் கறுத்திருந்தன.

அவ்வீதியிலிருந்து தெற்குப்புறம் உள்ளே, சுமார் ஐம்பது மீற்றர் தூரத்திற்கும் அப்பால் மிக உயரத்தில் பறவைகள் பறந்து கொண்டிருந்தன.

"அவை வெளவால்கள்" என்றார் ஒரு வயதுபோன ஐயா.

வெளவ்வால்களின் எச்ச மணங்கள் காற்றில் கலந்து வந்து மூக்கினுள் நுழைந்து அருட்டியதை வித்தியன் உணர்ந்தான்.

அருவருப்புடன் துப் துப் என்று துப்பினான்.

அந்த இடத்திற்கு சொஞ்சக்காலம் வந்து பழகிப்போனால் அது ஒரு அருவருப்பான மணமாகத் தெரியாது. அப்படியொரு மணம் வீசுவதான உணர்வும் இருக்காது. அதற்கேற்ப உடலும் இசைவாக்கம் பெற்றுவிடும். இருந்தும் வித்தியனுக்கு அந்த இடம் ஒரு புது அனுபவமாகவே இருந்தது.

ஐரோப்பிய நாடொன்றில் நிற்கும் தன் அண்ணனுக்கு பிறப்புப் பதிவுப் பத்திரம் எடுக்க வேண்டும்! அவசர தேவையாம்! அதை எடுத்த பிறகு "ரான்ஸ்லேற்" செய்து உடன் அனுப்ப வேண்டும்.

வித்தியனின் அண்ணா யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் பிறந்தவன். அதுதான் வித்தியன்

கச்சேரி வரவேண்டிய தேவை இருந்தது.

இப்ப வித்தியனைப் போன்ற பொடியளுக்கு யாழ்ப்பாணம் வந்து காரியம் முடிப்பதென்பது சரியான கஸ்டமாகவே இருந்தது. முன்பென்றால் மோட்டார் சைக்கிளில் சென்று அலுவல்கள் முடித்து வரலாம்.

இப்போதெல்லாம் அப்பிடி ஒன்றும் செய்ய முடியாது. நூறு மீற்றருக்கு ஒரு செக்கிங். "ரபிக்" கடுமையாக நின்று கொண்டிருக்கும். வித்தியனுக்கு "லைசென்ஸ்" உம் இல்லை.

கச்சேரிக்கு வந்த வித்தியனுக்கு கால்,கைகள் கடுத்துக் கொண்டன. நல்லாகவே களைத்துவிட்டான்.

பயணம் அலுப்பாக இருந்ததை விட, பயண அனுபவம் அரியண்டமாக அவனுக்கிருந்தது.

அந்தக் கன்ரீனுக்குள் நுழைந்து ஒரு சோடா குடிக்கலாம் என்று நினைத்தான். நேரத்தை கருத்தில் கொண்டு விரைந்து செயற்பட்டான்.

உள்ளே சென்றவன் விண்ணப்பப் படிவத்துடன் வெளியேறினான். மூன்று பிரதிகள் தேவை!

முத்திரை வாங்குவதற்காக வெளியே வந்து வீதி வழி நடந்தான்.

அவனை ஒரு உருவம் வழி மறித்தது. மெல்லிய உயர்ந்த உருவம்! மிகவும் வாடிய முகம்! பொது நிறம்! கன்னம் குழி விழுந்திருந்தது! தலைக் கேசங்கள் அழுக்குப் படிந்திருந்தன! அவை சீரற்ற முறையில் கலைந்திருந்தன.

கறுத்த ஜீன்ஸ், மெல்லிய நீலநிற அரைக்கைச் சேட் உடுத்தியிருந்தான்! இரண்டும் நிறம் வெளிறி கசங்கியிருந்தன. இத்தனைக்கும் அவனுக்கு வயசு இருபத்திரண்டு, இருபத்துமூன்று இருக்கும்.

"தம்பி..! தம்பி..! விண்ணப்பப் படிவம் நிரப்புவதென்டால் என்னட்டைத் தாங்கோ!" என்று வித்தியனிடம் கெஞ்சினான்.

"இல்லை..! இல்லை..! நான் நிரப்புவன். இப்ப நான் முத்திரை வாங்கப்போறன்!" என்று வித்தியன் பதிலுரைத்தான். வந்தவனின் முகம் கருகிக் கொண்டது.

வித்தியன் அப்பால் நகர்ந்து சென்றான். வித்தியனிடம் கெஞ்சியவன் பெரியதொரு ஏமாற்றத்துடன் வேறு வாடிக்கையாளரைத் தேடத் தொடங்கினான்.

அங்கு வித்தியன் காணும் சம்பவங்களும், வித்தியன் செய்து கொள்ளும் படிமுறையான செயல்களும் புதியனவாகவே வித்தியனுக்குத் தோற்றின.

முத்திரை வாங்கி வந்தவன் பிரமாண்டமாகத் தெரியும் அந்த உணவு விடுதியை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு கை மணிக்கட்டைத் திருப்பி நேரம் பார்த்தான். நேரம் 11.35.

விறுவிறென்று உணவு விடுதிக்குள் புகுந்தான். இருக்கையில் இருந்தான்.

"கொக்படி ஒண்டு தாங்கோ.." என்று கட்டளையிட்டான்.

விசாலமான அந்த உணவு விடுதியில் நிறையக் கூட்டம் இருந்தது. அநேகமானோர் சிற்றுண்டி அயிட்டங்களுடன் சோடா வகைக் குளிர்பானங்களை அருந்தி தாகம் தீர்த்தனர். ஒரு சிலர் மட்டும் தேநீர், பால் என்று அருந்தினர்.

மதியச் சாப்பாட்டுக்காக உள்ளே மீன், இறைச்சிகளை எண்ணையில் போட்டுப் பொரித்தனர். அந்த பொரியல் வாசம் வீதியெங்கும் மணம் பரப்பியது. வித்தியனின் நா ஊறிக் கொண்டது. "இண்டைக்கு மதியம் இங்கேயே சாப்பிடுவம்" என்று முடிவும் எடுத்தான்.

அவன் முன்னே ஸ்ரொவுடன் கொக்படி இருந்தது. அதை அருந்தியபடி இருந்தான். நடந்து முடிந்த ஒரு சம்பவம் வித்தியனின் நினைவில் வந்து போனது.

அன்று அவனுடைய மாமா சிவராசாவின் இளைய மகளுக்கு சாமத்தியத் தண்ணி வார்வை! நேரம் சுமார் இரவு ஏழு மணியிருக்கும். அங்கு சமூகம் தந்த எல்லோரும் குடும்பம், குடும்பமாக போட்டோ எடுப்பதில் ஆர்வமாக நின்றனர்.

வித்தியனும், அவனது நண்பர்கள் இருவரும் வீட்டின் பின்புறக் காணிக்குள் பதுங்கி நின்றனர்.

பின்பக்க வேலியின் பூவரசுக்கொம்பில் கோழிகள் தூங்கிக் கொண்டிருந்தன. மனித நடமாட்டம் உணர்ந்த அவை கொக்..! கொக்..! என்று அருட்டிக்கொண்டன.

"உக்ஷ்.." என்றான் வித்தியன். மற்ற இருவரும் சைலன்சாக நடந்தனர்.

வித்தியனின் தோளில் ஒருவன் ஏறி இருந்து கொண்டான். குந்தியிருந்த வித்தியன் தோளில் இருந்தவனுடன் எழுந்தான். மற்றவன் ஆள் நடமாட்டங்களைக் கவனித்தான். வித்தியன் ஓரளவு நிமிர்ந்து நின்றான். தோளில் ஏறியவன் சரியான பாரம். வித்தியன் கஸ்டப்பட்டுத் தாங்கி நின்றான்.

வித்தியனின் தோளில் இருந்தபடியே கோழிகளின் இருப்பிடத்தை அவதானித்தான். அதில் உள்ளவற்றில் பெரிய உருவம் பார்த்து கழுத்துப்பிடி பிடித்தான். பிடிபட்ட கோழி சத்தம் போடவில்லை. இறக்கைகளை "பட.. பட.." என்று அடித்துக் கொண்டது. மற்றயவை "கொக்கறோ..கோ.. கொக்கறோ" என்று பெரியதொரு சத்தத்துடன் பறந்து தப்பிச் சென்றன.

பக்கத்து வீட்டு வேலுப்பிள்ளை ஐயா "தாற்ரா அது! புடியா..! புடியா..! என்று சத்தம் மட்டும் போட்டார். ஆனால் அவர் வெளியே வர நினைக்கவே இல்லை.

வித்தியனின் அதிரடிப்படை சாதூரியமாகத் தப்பிச் சென்றது. நேராக திருப்பதிச் சித்தப்பா வீட்டுக்குப் போனார்கள்.

"கள்ளக் கூட்டங்கள்..! இண்டைக்கும் களவெடுத்துக் கொண்டு வந்திட்டாங்கள் போல" தங்கராணிச் சித்தி நகைச் சுவையோடு பேசிக் கொண்டார். ஊரில் எங்கேயும் கலியாண வீடு, சாமத்திய வீடென்றால் உப்பிடித்தான் கோழியள் களவுபோகும்.

உது தங்கட ஊர்ப் பொடியள் முசுப்பாத்திக்கு செய்வதென்றும் சனத்துக்குத் தெரியும். நெடுகிலும் இப்பிடி நடப்பதில்லைத்தானே!

இதனால் ஆரும் ஆரையும் பேச மாட்டார்கள். அதுக்காக பொடியள் கள்ளப் பொடியளும் இல்லை.

பொடியள் தரவளியில் கோளிகளைக் களவாகப் பிடித்துச் சாப்பிடுவதிலும் ஒரு சுகமும், சந்தோசமும் இருக்கத்தான் செய்யும்.

திருப்பதிச் சித்தப்பாவுக்குப் பிள்ளைகளும் இல்லை. இரண்டு பேருக்கும் அறுபதுக்கு மேல் இருக்கும். ஊர்ப் பொடியள் எல்லாருக்கும் அவர்கள் இருவரும் சித்தப்பாவும் சித்தியும் தான்.

சித்தப்பா கோழியை உரிச்சுச் சுத்தம் செய்து கொடுத்தார். வித்தியன் விறு விறுவென நோண்டினான். மற்றவன் வெங்காயம், பச்சை மிளகாய்களை மள மளவென அரிந்தான்.

மூன்றாமவன் தேங்காய் துருவி எடுத்து அவற்றை நீர் விட்டுக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தான். பிழிந்த பால்களை முதலாம் பால், இரண்டாம் பால், மூன்றாம் பால் என வேறு வேறு பாத்திரங்களுக்குள் விட்டுவைத்தான்.

சித்தப்பா இரு கால்களையும் நீட்டி இருந்து கொண்டு மாக்குழைத்துப் பிட்டு அவித்தார்.

இவை எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்தபடி சித்தி பாய் இழைத்துக் கொண்டிருந்தார். சித்தி அடுப்படிப் பக்கம் கிட்ட வரவே இல்லை.

கோழிக் குழம்பு "கொத கொத" என்று அவிந்து கொண்டிருந்தது. சித்தப்பா அதற்குள் இறைச்சிச் சாமான் தூளைப் போட்டதும் கறி வாசம் "கம கம" என்றிருந்தது. பொடியளுக்கு வாய் ஊறிக் கொண்டு வந்தது.

"எப்பவடா முடியும் ஒரு பிடி பிடிக்கலாம்" என மூவரும் தங்களுக்குள் அங்கலாய்த்தனர். அவித்த பிட்டுகள் தட்டுப்பெட்டிக்குள் பரவி இருந்தன. அவை நல்ல உதிர்ந்த பிட்டுக்கள், மிகவும் பதமான பிட்டுக்கள், பார்க்க மிக அழகாய் தெரிந்தன.

சித்தப்பா ஆளுக்கொரு மாபிள் கோப்பைகளைக் கழுவிக்கொண்டு வந்தார். அவர்கள் மூவரும் அதை வாங்கிக் கொண்டனர். தங்களுக்கான சாப்பாடுகளை தாங்களே பரிமாறி மகிழ்ந்தனர்.

சித்தப்பா கை, கால்களை கழுவிக் கொண்டு வந்தார். சுவாலையுடன் எரியும் விளக்கைத் தூக்கி தன் வாயில் உள்ள சுருட்டைப் பத்த வைத்தார். புகையை நன்கு இழுத்து வெளியே விட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு அது ஒருவித சுகத்தைக் கொடுத்தது.

இனி சித்தப்பா எதிலும் கலந்து சிறப்பிக்கமாட்டார். சித்தப்பா உப்பிடித்தான். பொடியளோட சேர்ந்து உதவிகள் செய்வார். சாப்பிடுவதில் மட்டும் தனித்துவிடுவார்.

சாப்பாடு முழுவதையும் பொடியளே சாப்பிட வேண்டும் என்ற கண்டிப்பிடுவார். தானோ தன்ர மனிசியோ அதில் கலந்து கொள்ளமாட்டார்கள்.

உந்த மாதிரியான நேரங்களில் பொடியளுக்கு ஒத்தாசை செய்வதில் அவருக்கு மனதில் ஒரு மகிழ்ச்சி! அவ்வளவுதான்!

வித்தியன் நினைவுகளிலிருந்து மீண்டான். அந்தச் சம்பவங்களை நினைத்துச் சந்தோசமடைந்தான். கோழிக் கறியின் "கம கம" வாசம் இந்த விடுதியிலும் இப்ப வீசியது.

சோடா குடித்து முடிந்ததும் அங்கிருந்து வெளியேறினான். வெளியே வந்து அலுவலகம் நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

முன்னர் தன்னை வழிமறித்தவனைச் சுற்றி நான்கு பெண்களும், இரண்டு வயதுபோனவர்களும் சூழ்ந்து நிற்பதை அவதானித்தான்.

ஒரு விண்ணப்பம் நிரப்பிக் கொடுத்தால் அவனுக்குப் பத்து ரூபா கிடைக்கும். தன்னை வழி மறித்தவனுக்காக இரங்கிக் கொண்டான். அவன் தன்னிடம் கெஞ்சிக் கொண்டதன் அர்த்தம் தெரிந்து கொண்டான் வித்தியன்.

வித்தியன் அப்பால் சென்று அலுவலகத்தினுள் நுழைந்தான். விண்ணப்பத்தைக் கொடுத்தான்.

பிறப்புப் பதிவின் அவசரத் தன்மையையும், தன் போக்குவரத்துச் சிரமத்தையும் வித்தியன் சொன்னான். அவனின் கதை கேட்ட அப்பகுதிக்குப் பொறுப்பான அக்கா இரங்கிக்கொண்டார்.

"தம்பி இரண்டு மணிபோல வாங்கோ தல்லாம்" என்றார்.

வித்தியனின் உள்ளம் நெருப்புத் தணல் மேல் நின்று குளிர் தண்ணிக்குள் குதித்தது போல் இருந்தது.

"தாங்ஸ் அக்கா..தாங்ஸ்" என்றான். வித்தியனுக்குப் பசி வயிற்றை விறாண்டியது. நேரே அதே உணவு விடுதிக்குப் போனான். அதே கோழிக் கறி வாசம் மணம் வீசிக் கொண்டுதான் இருந்தது. வித்தியன் அந்தச் சாப்பாட்டு மேசை முன் இருந்த கதிரையில் இருந்தான். சர்வர் வந்தான்.

"என்ன சாப்பாடு வேணும்" "கோழிக்கறிச் சாப்பாடொண்டு தாங்கோ"

சர்வர் வலு துரிதமாகச் செயற்பட்டான். ஓடர் கொடுத்துவிட்டு வந்தவன், மேசையைச் சுத்தம் செய்தான். பின்னர் கையைக் கழுவிவிட்டு குடிப்பதற்குத் தண்ணி கொண்டு வந்து அந்த மேசையில் வைத்தான்.

வித்தியனும் எழுந்து சென்று கை கழுவி, வாயிற்குள் நீர்விட்டு வாயை அலசிக் கொப்பளித்துவிட்டு வந்திருந்தான்.

அவன் வந்திருக்கவும் சாப்பாடு வரவும் நேரம் சரியாக இருந்தது.

சோற்றின் ஒருபகுதியை கோழிக் குழம்பு பரவி மூடியிருந்தது. இறைச்சித்துண்டுகள் நிறைந்து காணப்பட்டன. சதையுடன் சேர்ந்த ஒன்றிரண்டு எலும்புத் துண்டுகளும் காணப்பட்டன.

அதன் அருகாக கத்தரி வெள்ளைக்கறி, பருப்பு மஞ்சள் கறி, மற்றும் வெங்காயச் சம்பல், இப்படியாக அந்த உணவு மிக அழகாக இருந்தது.

வித்தியன் குழைத்துச் சாப்பிடத் தொடங்கினான். சாப்பாடு நல்ல ருசியாக இருந்தது. சாப்பாட்டின் சுவையை ரசித்துக் கொண்டே "ஒரு கொக்மீடியம் தாங்கோ" என்றான்.

அடுத்த கணம் அந்த சர்வர் கொக்மீடியத்துடன் வந்து நின்றான். ஸ்ரோவினை வாயிற்குள் வைத்து கோலாவை உறிஞ்சிக் குடித்தான். அந்த சுவையின் இன்ப மழையில் நனைந்தான் வித்தியன்.

"போ அங்கால..! சும்மா விளையாட்டா விளையாடுறாய்" முதலாளி சினந்து பேசினார்.

வித்தியன் குனிந்த தன் தலையை உயர்த்தி, யார்? என்ன பிரச்சினை? என்பதை அவதானித்தான். அதே மெலிந்த உருவம்! அவனே தான்! ஒரு விண்ணப்பம் நிரப்பிக் கொடுத்தால் பத்து ரூபா கிடைக்கும் என்று அந்தக் கச்சேரி வாசலில் அலைந்து திரியும் அவன்தான்.

அவன் முதலாளியிடம் கெஞ்சி நின்று கொண்டிருந்தான்.

"இஞ்சருங்க ஐயா! எண்பேருவா இதில இருக்கு. இதை வச்சுக் கொண்டு ஒரு கோழிக்கறிச் சாப்பாடு தாங்கோ! பிளீஸ்! என்றான்.

அவனைப் பார்த்தால் பாவமாயும் இருந்தது.

"கோழிக்கறிச் சாப்பாடு நூற்றியிருபது ரூபா! நட நட. உப்பிடியெண்டால் நாலு நாளேல நாங்கள் கடையை மூடிப்போட்டு வீட்டில் தான் இருக்க வேணும்". முதலாளியின் பேச்சு கடுமையாக இருந்தது. ஒருவனின் மானத்தை அவமானமாக்குவதாகவும் இருந்தது. அவன் மனம் நல்லாகவே கழன்றுபோனது. வெட்கிப்போனவனாக திரும்பினான்.

அவன் கச்சேரி வாயிலில் நின்று விண்ணப்பம் நிரப்பிக் கொடுத்து சிறுவருமானத்தைப் பெற்ற காலம் தொடக்கம் இதே உணவு விடுதியில்த்தான்

சாப்பிடுவான். சாப்பிடுவதென்ன ஒரு தேநீரும், போண்டாவும் எடுத்துக் கொள்ளுவான். எப்பவாகிலும் ஒரு நாள் மரக்கறிச் சாப்பாடு மட்டும் சாப்பிடுவான். அந்த நேரங்களில் எல்லாம் தனக்கு அருகாக இருந்து மீன்கறிச் சாப்பாட்டையோ, கோழிக்கறிச் சாப்பாட்டையோ ருசித்து ரசித்து சாப்பிடுபவர்களைப் பார்த்து மனதுக்குள் ஆசைப்படுவான். தன் உழைப்பின் வீரியத்தைக் கூட்டி ஒரு நாளைக்கென்றாலும் இதே உணவு விடுதியில் வாசமான கோழிக்கறிச் சாப்பாட்டை சாப்பிட வேண்டுமென நினைப்பான்.

இப்படி அவன் ஆசைப்பட்டு உழைப்பான். வீட்டின் அடுத்த நாள்செலவுத் தொகையை கருத்தில் நிறைப்பான். வெள்ளிக்கிழமை என்றால் அவன் இன்னும் துடினமாகச் செயற்படுவான். சனி, ஞாயிறு லீவு அந்த இரண்டு நாள்ச் செலவுக்காக வெள்ளிக்கிழமைகளில் அவன் கடுமையாக உழைத்துத்தான் ஆக வேண்டும்.

அவன் இப்படி உழைக்கும் நேரங்களில் வீட்டுச் செலவுத் தொகை போக ஒரு பத்து ரூபாத் தாளை தன் ஒரு நாள் சேமிப்பாக எடுப்பான். மிகுதிப்பணம் அனைத்தையும் தன் தாயிடம் கொடுத்து விடுவான்.

ஒரு நாளெண்டாலும் அந்தக் கடையில் கோழிக் கறிச் சாப்பாடு சாப்பிட வேண்டும் என்ற அந்த அவாஅவனை மேலும் மேலும் அவசரப்படுத்தின. தொண்ணூறு ரூபா சேர்த்து வைத்திருந்தான். அடுத்த நாள் இன்னுமொரு பத்து ரூபாவைச் சேர்த்தால் இருபது ரூபாவிற்கு கடன் சொல்லிச் சாப்பிடுவம்.

எப்படியோ கோழிக்கறியோடு சாப்பிடுவேன் என்று நினைத்திருந்தான்.

"அண்ணா! அண்ணா!நாளைக்கு எல்லாரும் கொம்பாஸ் கொண்டு வரவேணுமாம். அப்பிடிக் கொண்டு வராதவர்களை வெளியே பிடிச்சு விடுவேனாம். கணித சேர் சொன்னவர். அவர் ஒரு பொல்லாதவர்." என்றாள் அவன் இளைய தங்கை.

தங்கை, தன் வகுப்பறையில் அவமானப்படுவாள் என்ற பயம் அவன் நெஞ்சைத் தைத்தன. தன்னிடமிருந்த அவ்வளவு பணத்தையும் தன் தங்கையின் கையில் கொடுத்து அனுப்பினான். கலங்கியிருந்த தன் கண்களைத் துடைத்த வண்ணம் அவள் ஓடிச் சென்றாள்.

இப்படி ஒவ்வொரு தடவையும் அவன் ஆசைப்பட்டு பணத்தைச் சேர்ப்பான். பின்பு ஏதோ ஒரு வகையில் அந்தப்பணம் அந்த வீட்டில் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்து வைக்கும்.

அவன் கோழிக் கறி சாப்பிடாதவன் அல்ல! அந்த உணவு விடுதிச் சாப்பாட்டைப்பற்றி பலரும் பல விதமாகப் புகழ்வார்கள்! அதை இவன் காதுகள் கேட்டிருக்கின்றன! அது மட்டுமல்லாமல் அங்கு தேநீர் அருந்தும் நேரம் சாப்பாட்டின் வாசனையை முகர்ந்திருக்கின்றான். அவன் ஆசைப்பட்டான்! இங்கே ஒரு நாளாவது கோழிக்கறியோடு சாப்பிட்டு விடவேண்டும் என்று!

ஆனால் அவனின் அந்த நீண்ட எண்ணம் இப்பவும் கலைந்திருந்தது. உள்ளம் முள்ளில் விழுந்த பழஞ்சேலையாக படக்கென்று கிழிந்துபோனது.

அவனின் நிலைகண்ட வித்தியனுக்கு சாப்பிட மனம் ஏகவில்லை. உடனடியாகவே வித்தியனின் மனம் செயற்பட்டது.

"அண்ணே! இந்த அண்ணைக்கும் ஒரு கோழிக்கறிச் சாப்பாடு குடுங்கோ! நான் "பே"பண்றன்."

வித்தியனின் இந்த வார்த்தை கேட்டு அவன் திரும்பிக் கொண்டான். உள்ளம் மகிழ்ந்தவனாகக் காணப்பட்டான்.

வித்தியன் கையசைத்து அவனைக் கூப்பிட்டான். அவன் வித்தியன் அருகாக வந்து நின்றான்.

வித்தியன் தனக்கு முன்னுள்ள கதிரையைக் காட்டி "இதில உக்காருங்க" என்றான்.

அவன் வித்தியனின் முன் அமர்ந்தான்.

வித்தியன் சிறு புன்னகை ஒன்றை அன்பாக வீசினான்.

அவன் மனக் கஸ்ட்டப்பட்டான். பின்னர் அதில் ஒரு மாதிரி அதில உட்கார்ந்தான். அவனுக்கும் கோழிக்கறிச் சாப்பாடு வந்தது. சாப்பிடத் தொடங்கினான்.

சாப்பாடு நல்ல ருசியாக இருந்தது என்பதை, சாப்பாட்டை அவன் மெல்லும்போது ஏற்பட்ட வாய் அசைவும், அவன் முகமலர்ச்சியும் துருத்திக் காட்டி நின்றன.

வித்தியனின் வயிறு நிறைந்து கொண்டது.

●

நம்புவதற்கே சற்று கடினமாக இருக்கும். ஆனால் உண்மையிலேயே வியக்க வைக்கும் தகவல்களை கொண்டது தான் இந்த கட்டுரை.இதிலே கூறப்பட்டு இருக்கும் தகவல்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் வெகு வேகமாக நமது பூமியும், செவ்வாய்க் கிரகம் போலே ஆகிவிடும் போல் தெரிகிறது.
பிறந்து பதினைந்தே நாட்கள் ஆன குழந்தையின் தலை நிற்குமா? நான்கு மாதத்திலேயே தாயை "அம்மா" என்றழைக்குமா? ஒன்றரை வயதிலேயே செய்தித்தாள் கூறுகிறான்.
லெமூரியக் கண்டத்தின் ஆய்வுப் புத்தகம் ஒன்றை அவனது தாய் அவனுக்குக் கொடுத்த போது ஆச்சரியத்துடன் பார்த்த போரிஸ் லெமூரியா கண்டத்தின் அழிவு பற்றி பரபரப்பாக விவரிக்க ஆரம்பித்தான். இதெல்லாம் எப்படித் தெரியும் என்று கேட்டால் எல்லாம் நினைவில் இருக்கிறது என்று பதிலளிக்கிறான்.
பெரிய பிரமிடுகளைப் பற்றிப் பேசும் போரிஸ் மனிதத் தலை, சிங்க உடம்பாக காட்சியளிக்கும் Sphinx பிரமிடுக்குள் மனித வாழ்க்கையின் ரகசியங்கள்

# செவ்வாய்கிரகம் அழிந்தது அணு ஆயுத யுத்தத்தினால் தான்: புதிய சர்ச்சை

தலைப்புச் செய்திகளைப் படிக்குமா? இரண்டு மூன்று வயதிலேயே விண்வெளியைப் பற்றி விளக்கிக் கூறும் அறிவு கிட்டுமா?
வழக்கமாக நம் மூளையில் பதியப்பட்ட தகவல்களின்படி "இல்லை" என்பதே நம் பதிலாக இருக்கும். ஆனால் இதெல்லாம் நடந்தது உண்மை தான் என்று சொல்கிறார்கள் போரிஸ்காவின் பெற்றோர்.
சிலருக்கு பூர்வ ஜென்ம ஞாபகம் வரும். அந்த மாதிரி இந்த பையனுக்கு பூர்வ ஜென்ம வாசனை வந்து, நான் செவ்வாய் கிரகத்தில் இருந்து வந்த பையன் என்று கூறி அதன் பிறகு விஞ்ஞான உலகையே அவனது தகவல்களால் வியப்பில் ஆழ்த்தி இருக்கிறான்.
யார் இந்த போரிஸ்கா: ரஷ்யாவில் சைரினொவிஸ்க் என்னும் நகரத்தில் ஜனவரி 11, 1996ல் பிறந்தவன் போரிஸ் கிப்ரியானோவிச், சுருக்கமாக போரிஸ்கா. மேலே கேட்கப்பட்ட அத்தனை கேள்விக்குறிகளையும் ஆச்சரியக்குறிகளாக மாற்றியவன். தற்போது 12 வயதாகிறது இந்தச் சிறுவனுக்கு.
இவனது அசாத்தியமான ஆற்றல்களைக் கண்டு கவலைப்படுகின்றனர் பெற்றோர். புதிரான சில வழிகளின் மூலம் அவனுக்குள் தகவல்கள் ஊட்டப்படுவதாக எண்ணுகின்றனர்.
இரண்டு வயதிலேயே கிண்டர் கார்ட னில் சேர்க்கப்பட்ட போரிஸ்காவின் மொழியாற்றல், நினைவுத் திறன், சுட்டித்தனம் போன்றவை அசாதாரணமாய் இருந்ததாக ஆசிரியர்கள் கூறுகின்றனர். யாரும் அவனுக்கு சொல்லிக் கொடுக்காமலே தானாக பல திறமைகள் அவனுக்கு வந்ததாகக் கூறுகின்றனர்.
சில நேரங்களில் சம்மணமிட்டு அமர்ந்து செவவாய் கிரகம், அங்கு நிலவிய வாழ்க்கை முறை, இதர கிரக அமைப்புகள் போன்றவற்றைப் பற்றி விவரிக்கிறானாம் போரிஸ்.
தான் செவ்வாய் கிரகத்திலிருந்து பிறப்பெடுத்து இங்கு வந்ததாகவும், இன்றும் செவ்வாய் கிரகத்தில் மக்கள் வசிப்பதாகவும், ஆனால் பயங்கரமான பேரழிவினால் தற்போது நிலத்தின் அடிப்பரப்பில் வாழ்ந்து வருவதாகவும் கூறுகிறான். மேலும் செவ்வாய் கிரக வாசியாக இருந்த போது பூமிக்கு ஆராய்ச்சிக்காக வந்து சென்றதாகவும் இருக்கின்றன என்றும், அதைத் திறப்பதற்கான வழி அதன் காதுப் பகுதியில் உள்ளது போலத் தெரிவதாகவும் விவரிக்கிறான்.
போரிஸ்காவைப் போன்ற குழந்தைகள் பிறப்பது சமீப காலத்தில் சாத்தியமாகியுள்ளது என்றும் பொதுவாக 1980க்குப் பின்னர் பிறந்த குழந்தைகளில் சிலருக்கு இது போன்ற இயற்கையின் கொடை கிடைத்திருக்கிறது என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். இத்தகைய தன்மையுடையோரை "இண்டிகா குழந்தைகள்" என்றும் அழைக்கின்றனர்.
மாறிவரும் பூமியின் காந்தப் புலனானது 2009 மற்றும் 2012 காலகட்டங்களில் மிகப் பெரும் இரண்டு அழிவுகளை ஏற்படுத்தும் என்று போரிஸ் கூறுகிறான்.
செவ்வாயில் ஏற்பட்ட பேரழிவிற்கு அணு ஆயுதப் போரே காரணமென்றும், கதிரியக்கங்களின் வீரியம் காரணமாக தப்பிப் பிழைத்தவர்கள் வெளியே வரமுடியவில்லை என்றும், பாதுகாப்பான கவச அறைகளில் அவர்கள் பாதாளத்தில் வாழ்வதாகவும் கூறும் போரிஸ் அவர்கள் கார்பன்-டை-ஆக்ஸைடை சுவாசித்து வாழ்பவர்கள் என்றும் கூறுகிறான்.
பூமியைப் பொறுத்த வரை ஆக்ஸிஜனை மட்டுமே சுவாசிக்க முடியும் என்றும், ஆனால் இந்த பிராணவாயு மனிதர்களின் வாழ்நாளைக் குறைப்பதாகவும் சொல்கிறான். விண்வெளியைப் பற்றி சகலமும் தெரிந்து வைத்திருக்கும் போரிஸ் செவ்வாயில் இருக்கும்போது ஸ்பேஸ்கிராப்டை இயக்கும் பயிற்சி பெற்றிருந்ததாகவும் கூறுகிறான்.
இவனை வியப்புடன் நோக்கும் விஞ்ஞான உலகம், விஞ்ஞான பேராசிரியர்களே சரளமாக உரையாடுவதில் உள்ள சிக்கல்கள் இவனுக்கு இல்லை எனத் தெரிவிக்கிறது.
போரிஸ்காவைப் பொறுத்தவரை,"கள்ளங்கபடமில்லாத அன்பும், எதையும் மன்னிக்கும் தயாள குணமுமே மக்களின் சந்தோஷமான வாழ்க்கைக்கு வழி என்றும், இதைத் தாண்டிய எந்தவொரு விஷயமும் மனித குல அழிவிற்கு வழிவகுக்கும்" என்கிறான்.



பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் 1934ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும் இடை நிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடிசார் பொறியியற் கற்கை நெறியை நிறைவு செய்தார். அன்றைய காலத்தில் கொழும்பில் இயங்கிய இலங்கைப் பல்கலைக்கழகத்திலேயே பொறியியற்பீடம் இயங்கியது. தன்னுடைய பட்ட மேற்படிப்பை கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தில் 1962ம் ஆண்டு கலாநிதிப் பட்டத்துடன் நிறைவு செய்தார். துரை விதி; என்னும் மணல் துறை சார்ந்த விதி ஒன்றையும் நிறுவினார். இன்றும் கூட குடிசார் பொறியியலில் கற்பிக்கப்படும் Cam-clay locus ஆனது துரை விதியிலிருந்தே பெறப்பட்டது.

தொடர்ந்து இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்

# பேராசிரியர் அழகையா துரைராசா

## 10.11.1934 –11.06.1994

தில் பொறியியற்பீடம் ஆரம்பிக்கப்பட்டதும் அங்கும் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட பீடாதிபதியாகவும் கடமையாற்றினார்.

பின்னர் 1988ம் ஆண்டு புரட்டாதி மாதத்திலிருந்து 1994ம் ஆண்டு சித்திரை மாதம் வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தராக கடமையாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீடம் ஒன்று நிறுவப்படும் என்ற பலகலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுதி மொழியையடுத்தே பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரானார். ஆனால் இன்று வரை யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியற் பீடம் ஆரம்பிக்கப்படவேயில்லை.

> தன்னலமற்றவர் பொது நலத்தையே இலட்சியமாகக் கொண்டும் வாழ்ந்தவர். எளிமை அவரது அழகான மாண்பு. இந்த மண் எமக்குத் தந்த அறிவுஜீவிகளில் அற்புதமானவர். இந்த மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தவர் அவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் அக்பர் பாலம், பேராசிரியர் துரைராசாவினால் நிர்மாணிக்கப்பட்டது. சக பேராசிரியர் ஒருவரின் சவாலை ஏற்று மகாவலி ஆற்றில் ஒரேயொரு தூணை மட்டும் நிறுவி இப்பாலம் கட்டப்பட்டது. துரைராசா பாலம்; என அழைக்கப்பட வேண்டிய அந்தப் பாலம் இன்று அக்பர் பாலம்; என்றே அழைக்கப்படுகிறது. தமிழர்களாகிய எங்கள் பலருக்கே இந்த விடயம் தெரியாது.

அந்தப் பாலத்தின் பெயரை துரைராசா பாலம் என அழைப்பதன் மூலம் பேராசிரியரின் திறமைகளை மறைக்காமல் நினைவு கூர்வதன் மூலம் உண்மைகளை அடுத்த சந்ததியினருக்கு கடத்துவோம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய போது உடுப்பிட்டியிலிருந்து ஏறக்குறைய முப்பது கிலோ மீற்றர்கள் தூரமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு துவிச்சக்கர வண்டியிலேயே சென்று வந்தார்.போர் மேகங்கள் வடமராட்சிப் பகுதியை அதிகமாகச் சூழ்ந்திருந்த அந்தக் காலப்பகுதியிலும் வல்லை வெளியினூடாகப் பயணம் செய்து தன்னுடைய பணியைத் தவறாது செய்தார். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். எல்லோரிடமும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் ஒழுக்க சீலர். அதனால் எல்லோருக்குமே பேராசிரியர் துரைராசாவை மிகவும் பிடிக்கும்.

துரைராசா அவர்கள் ஒரு அபூர்வமான மனிதர். நெஞ்சத்தில் தூய்மையும், நேர்மையும் கொண்டவர். தன்னலமற்றவர் பொது நலத்தையே இலட்சியமாகக் கொண்டும் வாழ்ந்தவர். எளிமை அவரது அழகான மாண்பு. இந்த மண் எமக்குத் தந்த அறிவுஜீவிகளில் அற்புதமானவர். இந்த மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தவர் அவர்.

தமிழரின் உரிமைப் போராட்டத்துக்காக அளப்பரிய சேவைகள் செய்த மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் நோயின் கொடிய பிடியில் சிக்கி 1994ம் ஆண்டு ஆனிமாதம் 11ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

இச்சஞ்சிகை எண்திசை வெளியீட்டகத்தினால் 453, ஆடியபாதம்வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள ஆரு பிறிண்டஸ் இல் அச்சிட்டு 16.06.2011 இல் வெளியிடப்பட்டது.